# தந்தையும் இரு மைந்தரும் நச்சுத் திராவகத்துக்கு பலி; கைதடியில் பரிதாப சம்பவம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 274
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 28 றம்ழான் 2 வியாழக்கிழமை [13-11-69]

ஈழநாடு சந்தா

மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம், வியாழன்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் இரு மைந்தர்களும் நச்சுத்திராவகத்திற்குப் பலியான பரிதாபமான சம்பவம் நேற்று முன்தினம் கைதடியில் நடந்துள்ளது.

கைதடியைச் சேர்ந்த வேலன் பொன்னன் (வயது 35) தனதுஇரு ஆண் குழந்தைகளான பாலசிங்கம் (வயது 9) மகிந்தன் (வயது 6) ஆகியவர்களுக்கும் நச்சுத்திராவகம் கொடுத்தபின் தாமும் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. நமசிவாயம் மரணவிசாரணை செய்தார் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சாட்சியமளித்த பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் மரணவிசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

## மூன்று அரசாங்க ஊழியர் மீது வழக்கு

மாவிட்டபுரம், புதன்

தமது சொத்துவிபரங்களை வெளியிடாத மூன்று அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மீது லஞ்சத்தடுப்பு பகுதி இரகசியப் பொலிசார் முதன்முறையாக வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

4,750 ரூபா பெறுமதியான காணியையும் 50,000 ரூபா பெறுமதியான வீட்டையும் 1,000 ரூபா பெறுமதியான துவக்கையும்வைத்திருந்தும் இதனை வெளியிடாததற்காக ஒருவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழககுத் தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கு இம்மாதம் 27ந் திகதி விசாரிக்கப்படும்.

45,000 ரூபா பெறுமதியான வீடு, காணியாகியவற்றை வெளியிடாததாக மற்றொருவர் மீது யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு அடுத்தமாதம் 7ந் திகதி விசாரணைக்கு கெடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது

12,500 ரூபா பெறுமதியான சொத்தைவெளியிடாததாக வேறொருவர் மீது மன்னார் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு இம்மாதம் 21-ந் திகதி விசாரிக்கப்படவிருக்கிறது.

இவ்விதவழக்குகள் இப்போதுதான் முதன்முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதுகுறிப்பிடத்தக்கது.



காங்கிரஸ் கட்சியிலிருந்து

# இந்திரா காந்தி விலக்கப்பட்டார்

## நிஜலிங்கப்பா குழு நடவடிக்கை

புதுடில்லி, நவ. 12

திருமதி இந்திரா காந்தியைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்குவதற்கு திரு. நிஜலிங்கப்பா குழுவினர் முடிவு செய்து விட்டார்கள். இன்று காலையில் புதுடில்லியில் திரு. நிஜலிங்கப்பா தலைமையில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பதினொரு உறுப்பினர்களும் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் ஆதார உறுப்பினர் பதவியிலிருந்து திருமதி இந்திரா காந்தியை விலக்கி விடுவதென்றும் முடிவு செய்தஅவர்கள், காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவுக்கு வேறு ஒருவரைத் தெரிவு செய்யும்படியும் அந்தக் குழுவைக் கேட்டுக்கொள்ள முடிவு செய்தனர்.

திருமதி காந்தியின் அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் ஆதார உறுப்பினர் உரிமையை ரத்து செய்து காங்கி

திரு. நிஜலிங்கப்பா குழு ஒத்துழைப்போடும் தொடவினை இந்த நடவடிக் ர்ந்து பதவியிலிருக்கக்கூடும் கையை காங்கிரஸ் ஆட்சி என்றும், தமது சோஷலிஸ மன்றக் குழுவினர் எப்படி பொருளாதாரத் திட்டங்க

கொழும்பு

## துறைமுக நிதிப்பகுதி ஊழியர் வெளிநடப்பு

கோட்டை, புதன்

கொழும்பு துறைமுகநிதிப் பகுதியைச் சேர்ந்த 600 பேர் இன்று திடீரெனவெளிநடப்புச்செய்தனர் கடந்த போயாவுக்கு முதல் தினம் நிதிப்பகுதியில் உயர்பதவி வகிக்கும் ஒருவரை பொலிசார் கைதுசெய்ததற்குஎதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே இவர்கள் இன்று வெளிநடப்புச்செய்தனர்

'தனிமனிதனின் சுதந்திரத்தில் கைவைப்பதற்குப் பொலிசாருக்குஉரிமைகிடையாது கைதுசெய்யப்பட்டவர் எமது சங்க அங்கத்தவர், கைதுசெய்யப்பட்டது அநீதியானது' என்று இலங்கை வர்த்தகஊழியர்சங்க பொதுக்காரியதரிசி திரு பாலதம்பு தெரிவித்தார்

## தோட்டப் பாடசாலைகள்: மூவர் கமிட்டி நியமிக்கப்படும்

கோட்டை, செவ்

தோட்டப்பாடசாலைகளை பொறுப்பேற்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு மூன்று பேர் கொண்ட கமிட்டியொன்றை அரசாங்கம் நியமிக்க முடிவுசெய்துள்ளது

ஓய்வுபெற்ற கல்விமாஅதிகாரி திரு ஈ ஏச் டி அல்விஸ் தலைமையில் இந்த கமிட்டி

தோட்டப்பாடசாலை பிள்ளைகளின்கல்விகுறித்துதோட்டத் தொழிலாளர், பெற்றோர் தூதுகோஷ்டிகள் அரசாங்கத்திடம் அதிருப்தி தெரிவித்தனர்

விசாரணையின் பின்னர் தோட்டப்பாடசாலைகளைஅரசாங்கம் பொறுப்பேற்பது பற்றியோ, அன்றி விசேஷ

## தமிழில் வழக்குத் தொகுப்புகள்

### தமிழக அரசு பரிசுத் திட்டம்

## இப்படி ஒரு பிரச்னை

உடுப்பிட்டி, செவ்

பருத்தித்துறை - உடுப்பிட்டி காரியாதிகாரி கந்தோர்களின் எல்லைப்பிரச்னை தீராத பிரச்னையாக உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் வழக்குத் தொகுப்புகள்

## தமிழக அரசு பரிசுத் திட்டம்

சென்னை, நவ 11

முன்மாதிரியாகவுள்ள வழக்கு தீர்ப்புகளின் சிறந்த தமிழ்த் தொகுப்புக்கு ரூபா 5000 பரிசு அளிப்பதென்று தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது

முன்மாதிரி தீர்ப்புகளில் தமிழ்த் தொகுப்பை அட்வகேட்டுகள், நீதி நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் சட்டப்படிப்பு யோக்கியதாம்சம் உள்ளவர்கள் முதலியவர்கள் அனுப்பலாம் சிவில் சட்டம்சம்பந்தமாக 12முன்மாதிரி தீர்ப்பு அடங்கிய சிறந்த தொகுப்புக்கு ரூ 3000 வெகுமானம் வழங்கப்படும் கிரிமினல் சட்டம் சம்பந்தமாக 12 முன்மாதிரித் தீர்ப்புகள் அடங்கிய தொகுதிக்கு ரூபா 2000 பரிசு வழங்கப்படும்

# விமானப் பணிப்பெண்கள்

லண்டன், நவ 11

விமானத்தில் பணிப்பெண்ணுக வேலைசெய்வது இப்போது இளம்பெண்ணைக் கவருவதில் முதலிடம்பெற்றதாக இருக்கலாம். எனினும் பெண்கள் இவ்வித வேலையில் சேருவதுபற்றி 'பல்ஸ்'' என்னும் வைத்தியத்துறையைச் சேர்ந்த பத்திரிகை எச்சரிக்கை விடுத்துள்ளது:

அது எழுதியுள்ளதாவது: ''இது அலட்டிக்கொள்ளாமல் இருக்க விரும்பும் பெண்களுக்கான வேலையல்ல. நல்ல அறிவு. சமயோசிதபுத்தி, பல மொழிகளில் தேர்ச்சி, நல்ல உடல் வலு ஆகியன இதற்குத் தேவை''.

பெரும் சோர்வு, எப்போதும் பதற்றஉணர்வு, சொந்தவாழ்க்கையில் விரும்பியபடி செயல்படமுடியாமை ஆகியன இந்த வேலையில் உள்ள பாதகங்களாகும். விமானங்களின் உட்புறம் காற்றழுத்தம் கொண்டது என்பதால் அது ஒரு பெண்ணின் நிறத்தைப் பாதித்துவிடலாம் என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர். விமானத்தில் ஒருமணிநேரம் வேலை செய்வதென்பது தரையில் இரண்டரை மணிநேர வேலைக்குச்சமம்'' என்று கணக்கிடப்பட்டுள்ளது தவிர, அமெரிக்கா, ஐரோப்பா, இடைவெளியில் பறக்கும் பெரிய விமானம் ஒன்றில் வேலைபார்க்கும் பணிப்பெண் ஒரு தடவை செல்லும்போது விமானத்துக்குள் மேலும் கீழும் நடக்கும் தூரம் 5 மைல்கள் இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

## ''பல்கலைக்கழக வளவுக்குள்

# பொலிஸார் உத்தரவின்றி இனி நுழையலாம்''

## உபவேந்தர் அறிவிப்பு

கொழும்பு, புதன்

பல்கலைக்கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவர்களும் இனிப்பொதுமக்கள் போல காணிச்சட்டத்துக்குட்பட்டவர்களென்றும், பொலிசார் முன்னர்போல உபவேந்தரின் உத்தரவின்றி பேராதனைபல்கலைக்கழகவளவுக்குள் நுழையலாம் என்றும் பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் திரு ஒ ஈ பெரேரா அறிவித்திருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கு இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கிறார்

பல்கலைக்கழகம் சம்பந்தமாக காலத்துக்குகாலம் மாற்றிஅமைக்கப்படும் சட்டங்களுக்கு மாணவர் பணிந்துநடக்க வேண்டுமென்றும் உபவேந்தர் திரு பெரேரா தெரிவித்துள்ளார்

'இது ஆபத்தான சட்டம்' என்கிறார் பேராதனைப்பட்டதாரி மாணவர்சங்கத் தலைவர்

## ஒரு பிரச்னை

உடுப்பிட்டி, செவ்

பருத்தித்துறை - உடுப்பிட்டி. காரியாதிகாரி கந்தோர்களின் எல்லைப்பிரச்னை தீராத பிரச்னையாக உருவெடுத்துள்ளது

பருத்தித்துறை நகரசபையின் உபதலைவரும் 1-ம் வட்டார உறுப்பினருமான திரு வே நாகநாதன் இவ்விரு காரியாதிகாரி கந்தோர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லை இச்சபையின் 1-ம் 9-ம் வட்டாரங்களில் வதியும் 5000க்கு மேற்பட்ட மக்களுக்கு இன்னல் விளைவிக்கக்கூடிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரத்திற்கு இதுசம்பந்தமாக 6-9-69ல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 3-ம் இலக்கப் பிரேரணையை அனுப்பி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்

## இலங்கைத்திட்டம் பாரதம் பின்பற்றும்

கோட்டை, புதன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசாவின் வீடமைப்புத்திட்டம் பாரதத்தில் பின்பற்றப்படவிருக்கிறது. குறைந்த செலவில் இருநாட்களில் கட்டிமுடிக்கக்கூடிய இத்திட்டம் பாரதத்திலுள்ள பலராஜ்யங்ளில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

## மேலதிக தேவை

கோட்டை, வியா.

இலங்கைப் பொலிஸ்படையில் ஏறக்குறைய 3000 உத்தியோகத்தர் பற்றுக்குறையாக உள்ளனர். வேலையற்ற வாலிபர் பகுதி பகுதியாகத் தெரிவுசெய்யப்படுவதன் மூலம் இவ்வெற்றிடத்தைநிரப்ப, வேலையற்றோர் பிரச்னை சம்பந்தமாக ஆராயும் மந்திரி சபையின் உபகுழு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் கடமைகளுக்குத் துணைபுரியும் வகையில் 1345 பேர் பொலிஸ் சேவைக்கு மேலதிகமாகத் தேவைப்படுகின்றனர். இது சம்பந்தமாகப் பொலிஸ் அதிபர் திரு. அலரிக் அபயகுணவர்த்தன திறைசேரியின் ஆள்திரட்டும் பகுதியினருடன் தொடர்புகொண்டுள்ளார்.

செய்யும்படியும் அந்தக் குழுவைக் கேட்டுக்கொள்ள முடிவு செய்தனர்.

திருமதி காந்தியின் அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் ஆதார உறுப்பினர் உரிமையை ரத்து செய்து காங்கிரஸ் ஆட்சி மன்றக் குழுவின் தலைவர் பதவியிலிருந்தும் அவரை விலக்குவதென்றும் திரு. நிஜலிங்கப்பா முடிவு செய்திருப்பது, பிரதம மந்திரி பதவியிலிருந்தும் அவரை விலக்கும் முயற்சியாகும். பிரதம மந்திரியை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆட்சி மன்றக் குழுவே முடிவு செய்ய வேண்டும் இதன் காரணமாகவே புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும்படி காரியக் கமிட்டியினர் ஆட்சிமன்றக் குழுவுக்கு ஆணையிட்டுள்ளனர்.

காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழு 13-ம் திகதி (இன்று) கூடவிருக்கிறது. 16-ம் திகதி கூடுவதாக இருந்த ஆட்சி மன்றக்குழு கூட்டத்தை இரண்டு தினங்கள் முன்னதாகவே கூட்டுவதென்று திருமதி இந்திரா காந்தியின் குழுவினர் முடிவு செய்தனர். அதனால் 13-ம் திகதி கூடுவதாக இருந்த காரியக் கமிட்டியினர் 11-ம் திகதியே கூடி ஆலோசனைகள் நடத்தினர். நேற்றும் இன்றும் நடைபெற்ற ஆலோசனைகளின் பின்னர் திருமதி காந்தியை கட்சியிலிருந்து விலக்குவதென்று முடிவு செய்தனர்.

திரு. நிஜலிங்கப்பா குழுவினரின் இந்த நடவடிக்கையை காங்கிரஸ் ஆட்சி மன்றக் குழுவினர் எப்படி வரவேற்பார்கள் என்று தெரியவில்லை. அனேகமாக நாளை ஆட்சிமன்றக் குழுவின் கூட்டத்தில் பிரதமருக்கு பதிலாக புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யக் கூடியதாக பெரும்பான்மை கிடைக்காவிடில் சின்டிக்கேட் குழுவை ஆதரிப்பவர்கள் வெளியேறக்கூடும் என்று கருதப்படுகின்றது காரியக் கமிட்டியினரின் இந்த நடவடிக்கையின் காரணமாக கட்சியில் இனி பிளவு தவிர்க்கமுடியாததாகிவிட்டது என்று கூறப்படுன்றது. இனி பிரதமர் என்ன நடவடிக்கை எடுப்பார் என்பதைப் பற்றி அறிய அரசியல் அவதானிகள் ஆவல் கொண்டிருக்கிறார்கள். திருமதி. காந்தி புதிதாக ஒரு கட்சியை உருவாக்குவாரா அல்லது கட்சியில் தமது நிலைமை மீண்டும் ஸ்திரப்படுத்திக்கொள்ள முயற்சி எடுப்பாரா என்பதில் பலரும் அக்கறைகாட்டுகிறார்கள்.

எப்படியும் இப்போதைக்கு ஆட்சிமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று அவதானிகள் கருதுகின்றனர். பிரதமர் தமது சகாக்களின் ஆதரவோடும், எதிர்க்கட்சியிலுள்ள கம்யூனிஸ்ட், தி. மு. க. போன்றவர்களின் ஒத்துழைப்போடும் தொடர்ந்து பதவியிலிருக்கக்கூடும் என்றும், தமது சோஷலிஸ பொருளாதாரத் திட்டங்களைத் தீவிரமாக அதில் நடத்த முனையக்கூடும் என்றும் பலர் கருத்துவெளியிடுகிறார்கள்

காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது குறித்து திருமதி காந்தி உடனடியாக கருத்து ஏதும் வெளியிடவில்லை.

# நிக்ஸன் கொள்கைக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டம்

நியுயோர்க், நவ: 12

அதிபர் நிக்ஸனின் வியட்னும் கொள்கையை ஆதரி



த்து அமெரிக்கா முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இன்னும் ஒருவ்வாரத்தில் அதிபர் நிக்ஸனின் வியட்னும் கொள்கைக்கு எதிராக மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறவிருப்பது தெரிந்ததே. நிக்ஸனுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் அதே வேளையில் அங்குமிங்குமாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றுவருகின்றன.

நேற்று சில வியாபார ஸ்தாபனங்களில் குண்டுகள் வெடித்த சம்பவங்கள் இடம்பெற்றன. வியட்னும் போரின் காரணமாக இந்த ஸ்தாபனங்கள் நன்மையடைவதற்கு எதிராகவே எதிர்ப்பாளர்கள் இந்தக் குண்டுகளை வெடிக்கச் செய்ததாகக் கருதப்படுகின்றது. இதனல் சிலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

# சீனவை கனடா அங்கீகரிக்கும்

ஓட்டாவா நவ, 12

கம்யூனிஸ்ட் சீனவை கனடா அங்கீகரிக்கத் தயாராய் இருப்பதாக பிரதமர் திரு தியுடோ அறிவித்திருக்கின்றார்

ஸ்டொக்கோமில் இருநாடுகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் சிறப்பாக முன்னேறி வருவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்

## டிப்ளோமாவுக்குத் தெரிவு

பருத்தித்துறை. புதன்

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சிற்றம்பலம் இலங்கைப் பல்கலைக்கழகக்கல்விடிப்ளோமா பயிற்சிக் கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒராண்டு பயிற்சி பெறுவார்.

மாக ஆராய்வதற்கு மூன்று பேர் கொண்ட கமிட்டியொன்றை அரசாங்கம் நியமிக்க முடிவுசெய்துள்ளது

ஓய்வுபெற்ற கல்விமாஅதிகாரி திரு ஈ ஏச் டி அல்விஸ் தலைமையில் இந்த கமிட்டி நியமிக்கப்படவுள்ளது டிசம்பர் மாதத்தில்கமிட்டி தனது விசாரணையை ஆரம்பிக்கும்

ரோர் தூதுகோஷ்டிகள் அரசாங்கத்திடம் அதிருப்தி தெரிவித்தனர்

விசாரணையின் பின்னர் தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது பற்றியோ, அன்றி விசேஷ நிர்வாகத்தின்கீழ் இயங்க வைப்பது பற்றியோ முடிவு செய்யும்

## 6 புதிய உதவி பொலிஸ் அதிபர்கள்

கோட்டை, புதன்

6 புதிய உதவிப் பொலிஸ் அதிபர்கள் விரைவில்நியமிக்கப்படவிருக்கின்றார்கள் டிசம்பர்மாத முற்பகுதியில் இந்த நியமனம் வழங்கப்படும்

ஹிலாறி அபயகுணசேகரா, வி டி சமரசிங்கா ஜி. ஜே ரட்ணநாயகம், எம் டி ஜி பீட்டர் டபிள்யு எஸ் பெர்னுண்டோ, சி தர்மராஜா ஆகியோரே புதிய உதவி பொலிஸ் அதிபர்களாக நியமிக்கப்படவிருக்கிறார்கள்,

## மார்கோஸ் வெற்றி

மணிலா, நவ. 12

பிலிப்பைன்சில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் மார்கோஸ் மீண்டும் வெற்றி பெற்றிருப்பதாக அறிவித்திருக்கிறார். பிலிப்பைன்சில் இரு தடவைகள் அதிபர் பதவிக்கு தெரிவாகியிருப்பது இதுவே முதல் தடவை.

## நெருப்புக்காய்ச்சலை ஒழிக்க முயற்சி

கோட்டை, புதன்

மலேரியாவை முற்றாக ஒழித்துவிடலாமென்று சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்

நெருப்புக்காய்ச்சலைப் பரப்பும் கிருமி ஐஸ்கிரீமிலிருக்கிறதாவென்று கொழும்பு மாநகரசபையின் சுகாதார இன்ஸ்பெக்டர்களால், இதுவரையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளில் ஐஸ்கிரீமில் இக்கிருமிகள் இல்லையென்பதை தெளிவுபடுத்தியிருப்பதாக வைத்திய அதிகாரி டாக்டர் ஜி ஏ ஆர் பெரேரா தெரிவித்தார்

## வானெலி லைசென்ஸ்

கோட்டை, புதன்

லைசென்ஸ் பெருமல் வானெலிப் பெட்டிகளைப் பாவிப்பவர்களுக்கு அவைகளைப் பெறமேலும் அவகாசம் வழங்க தபால்; தந்திப் பகுதி தீர்மானித்துள்ளது

முந்திய இருவருடங்களுக்குமுள்ள லைசென்ஸ் பணத்தைச் செலுத்தாமலும் அபராதத்தைச்செலுத்தாமலும் இன்றிலிருந்து லைசென்ஸுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

# சுன்னுகம் மயான கொலை வழக்கில் இரண்டாம் எதிரி விடுதலை

மல்லாகம். புதன்

சுன்னுகம் மயானக்கொலை வழக்கின் இரண்டாம் எதிரி விடுதலையானுர் பொலிஸ் தரப்பில் இக்கொலைவழக்கு விசாரணை முடிவுற்றதையடுத்து மல்லாகம்ம் நீதிபதி திரு எஸ், ஆனந்தகுமாரசாமி இரண்டாம் எதிரிக்கு எதிராக போதியசாட்சியங்கள் இல்லாமையால் பிரஸ்தாபஎதிரியைவிடுதலை செய்வதாகத் தெரிவித்தார்

முதலாம் எதிரி தொடர்ந்து றிமாண்டில் வைககப்பட்டு மேல் விசாரணை இம்மாதம் 29ம் திகதிககுஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எதிரிகள்தரப்பில்ஆஜரானவழககறிஞர் ஆர் ஈ தம்பிரத்தினம் அன்றைய தினம் தொகுப்புரையை நிகழ்த்துவார்.

இக்கொலைவழக்கு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான ஆர். ஏ. ஜேக்கப், அமீன், சார்ஜண்ட் ஏ. சந்தியாப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர். சாட்சிகள் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டனர்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம், புறக்டர்களான ஆர். ஜே. செல்வரத்தினம், எஸ். செல்லத்துரை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென் சில்வாவழக்கை நடாத்தினர்.

மண்டைதீவு வாசியான கே. சிறீகாந்தன் என்ற வாலிபரை கொலைசெய்ததாக சுன்னுகம் பொலிஸாரால் ரி. கிருஷ்ணன், என் தங்கராசாஆகியஇருவருக்கு எதிராக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

3 1/2 அடி தொடக்கம் 5 அடி வரை சுற்றுள்ள முதிர்ந்த முதிரை மரங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். ஆ. சிவகுரு, தேவாலய வீதி, சாவகச்சேரி. 1536

ரேப்ரெக்கோடர்:

தானே இயங்கும் நாலு வேகமுள்ள TK 149 குறுன்டிக் ரேப்ரெக்கோடர் விற்பனைக் குண்டு. புது மார்க். காலை 9 மணியிலும், மாலை 6 மணியிலும் பார்வையிடலாம். 13, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1537

### தேவை

வீடு:

கொக்குவில், தின்னவேலி, மானிப்பாய் அல்லது யாழ்ப்பாணம் 5 மைல் விஸ்தீரணத்திற்குள் சகல வசதிகளுடன் டிஸ்பென்சரியும் வைக்கக்கூடிய வீடு பிரதானவீதியில் தேவை. தொடர்பு கொள்க. டாக்டர் பாலச்சந்திரா, அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 1538

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு தியேட்டருக்கு காஷியர், புக்கிங் கிளார்க், உதவி மனேஜர் தேவை. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மனுச்செய்யவும். விளம்பர இல: 1539, c/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1539


## இலவச தீட்சை

சுழிபுரம், புதன்

தொல்புரம் இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் இருபத்தைந்து பேருக்கு இலவசமாக சமய தீட்சை வைக்கப்பட்டது.

தொல்புரம் மானு முதலியார் மடத்தில் மூளாயில் உள்ள சைவக் குருக்களால் தீட்சை வைக்கப்பட்டது. சிறியவர் முதல் வயதுவந்த பெரியவர்கள் பலர் தீட்சை பெற்றனர். தொல்புரம் இந்து சமய விருத்திச் சங்கத்தினர் வருடா வருடம் இப்பணியைச் செய்துவருகின்றனர்.


REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p m

Francis Lederer, Greta Thyssen in BLOOD CREATURE (Adults)

வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த

நெஞ்சிருக்கும் வரை

வல்வெட்டித்துறை

றஞ்சனா தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.

சுந்தரராஜன் - பத்மினி பேபிராணி நடித்த

குழந்தைக்காக


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 13—11—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6 30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 புல்லாங்குழல், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.

— —

கரவெட்டியில்

## தீபாவளிச் சம்பவங்கள்

பருத்தித்துறை, புதன்

கரவெட்டி கிழக்குப்பகுதியில் தீபாவளித்தினத்தன்று ஏற்பட்ட கோஷ்டிக் கலவரத்தின் விளைவாக ஒரு பெண் உட்படப் பலர் பருத்தித்துறை வைத்தியசாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றிப் பருத்தித்துறை பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்

கரவெட்டி தபால் கந்தோருக்கருகாமையில் கலாட்டா செய்த இருவரைப் பற்றிப் பொலிசார் விசாரித்துவருகின்றனர்

நெல்லியடியில் ஒருவானும் இ போ ச பஸ்ஸும் மோதியதால் வானுக்குப் பலத்த சேதமேற்பட்டது. பிரயாணிகள் காயமின்றித் தப்பினர்

வெடிகொளுத்திய சிறுவன் ஒருவன் சொற்பகாயங்களுடன் பருத்தித்துறைத் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறான்

சினிமா விமர்சனம்

## குலவிளக்கு

சிந்தனைச்செல்வன்

தியாகத்துக்கு பல சோதனைகள் ஏற்படும்போது தான் தியாகத்தின் பெருமை வெளிப்படுகிறது. பெண்ணின் பெருமையும் அவள் பிறருக்காகச் செய்யும் தன்னலமற்ற சேவையில் தான் பரிணமிக்கிறது.

ஆசிரியையாகவரும் சரோஜாதேவி குலவிளக்காக 'குலவிளக்கில்' வருகிறார் படம் முழுவதும் அவரது நடிப்பின் முதிர்ச்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பாசமற்றவர்களான தம்பி, தங்கைக்கு தாயாக விருந்து அவர்களின் நலனில் முழு அக்கறைகாட்டி தான் உண்ணமல், அவர்களை உண்ணவைத்துத்தனக்கென்று எதுவித விருப்பு வெறுப்புக்களையும் தன்னகத்தே தேக்கி வைக்காது அவர்கள் விருப்பத்தினை பூர்த்தி செய்து, வருகிறாள் கண்ணம்மா,

ஆசிரியையாகவரும் அவர் தனது வருவாயைக்கொண்டு குடும்பம் நடத்தமுடியாதென்று எண்ணி, ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கும் போதும் கடன்பட்டு தங்கைக்குத் திருமணம் செய்து வைக்கும்போதும் தம்பியை படிக்கவைக்கப் பாடுபடும் போதும்சரோஜாதேவி தியாகத்தில் ஊறிய ஒருசகோதரியாகவே காட்சியளிக்கிறார்

சகோதரனை பரீட்சையில் தோற்றவைப்பதற்காக அன்புடன் வளர்த்த நாயை விற்கும்காட்சி நெஞ்சுஉருக்கும் காட்சி. சோதனைகள் ஏற்படும் பொழுது சரோஜாதேவி தமது உயர்ந்தநடிப்பால் ரசிகர்களின கண்களை கலக்கிவிடுகிறார்.

கண்ணம்மா படிப்பித்த பாடசாலையின் மனேஜர் அவளைத்திருமணம் செய்ய விரும்பியபோது 'அப்பாவிடம் போய்க்கேளுங்கள்' என்று கூறிய அவள் இறுதியில் தானே அவனிடம் சென்று தன்னைத் திருமணம் செய்யும்படி கேட்கும்போது நமது நெஞ்சம் விம்மத்தான் செய்கிறது.

கண்ணம்மா இரத்தம் இரத்தமாக வாந்தியெடுத்து களைத்துப்போய் இருக்கும் போது அவள் விற்றநாய் அவளிடம் வந்து அவளுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுக்கும்போது ''கேவலம் அவளால் அன்பு செய்யப்பட்டு. உயர்ந்தநிலைக்கு வந்துள்ள அவளின் சகோதரர்கள் உண்மையிலேயே இந்த நாயைவிட கீழானவர்கள்'' என்று நம்மையுமறியாமலேயே முணுமுணுக்கத்தான் செய்கிறோம்.

இவ்விதம் உள்ளத்தை நொகிழவைக்கும் காட்சிகள் பல.

ஜெமினிகணேசன், எஸ். வி. சுப்பையா, ரங்காராவ். நாகேஷ், வி. கே ராமசாமி, கருணாநிதி, ராஜசுலோசனா, குமாரிசச்சு, ஆகியோரும் படத்தின் வெற்றிக்கு உழைத்துள்ளார்கள்.

வெகுநாட்களுக்குப் பிறகு இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனையும் குலவிளக்கில் காணமுடிகிறது.

உயர்ந்த லட்சியநோக்கோடு தயாரிக்கப்பட்ட குலவிளக்கு இப்போது யாழ். ராணி சினிமாவில் ஓடிக் கொண்டிருக்கிறது.

— —

## அளவெட்டி வெற்றி

மாவிட்டபுரம், புதன்

தீபாவளியன்று அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் மல்லாகம் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி கோஷ்டியினர் 2—1 கோலால்வெற்றிபெற்றனர்.

— —

## ''மாசுபடாமல் காக்கவேண்டும்''

சித்தன்கேணி, புதன்

''தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது; காலவெள்ளத்தால் அழியாத இறையருள் பெற்றது. அதன் முப்பிரிவுகளில் இசைத் தமிழ், தெய்வீகத் தன்மை வாய்ந்தது. இசை, மக்கள் முதல் மாக்கள் வரையான ஜீவன்கள் ரசிக்கக்கூடியது. இத்தகைய இனிய இசை, சினிமா சங்கீதத்தினுல் மாசுபடாமல் காப்பாற்றவேண்டும்''

இவ்வாறு தீபாவளித் திருநாளையொட்டி பிலவத்தை இளைஞர்களால் நடாத்தப்

## புதிய உறுப்பினர்

சுழிபுரம், வியாழன்

யாழ். மாவட்ட விவாக இறப்பு பிறப்பு பதிவுகாரர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வலி. கிழக்கு

## ச.ச நிலைய தீர்மானம்

கோப்பாய், புதன்

''வடபகுதிக்கு விஜயம் செய்யும் பிரதமருக்கு வலி. கிழக்குக்காரியாதிகாரி கந்தோரில் பொது வரவேற்பளிக்கப் படவேண்டும். கோப்பாய் கிராமப்பகுதி சிரமதானமூலம் முன்னேற்றப்படலவசியம்'' எனக்கோரும் இரு தீர்மானங்கள் சமீபத்தில் நடைபெற்ற வலி கிழக்குசனசமூக நிலைய சமாஜக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது பின்வருவோர் சமாஜத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள்- வி கந்தப்பிள்ளை, சி. கதிரவேலுப்பிள்ளை, தலைவர்: திரு ரி தனபாலசிங்கம், உப தலைவர்கள்: திரு. எஸ். விஸ்வலிங்கம். திரு. கே சதானந்தன், செயலாளர்: திரு. வி சுந்தரலிங்கம், உப செயலாளர்: திரு. எஸ் கோணராசா, பொருளாளர்: திரு எம். திருநாவுக்கரசு.

ஒன்பதுபேர் கொண்டகமிட்டியொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

—

## தீபாவளிக் கலைவிழா

உருத்திரபுரம், புதன்

கிளிநொச்சி இந்துமகா வித்தியாலயத்தில் தீபாவளி கலைவிழா திரு ஆ. ச. முருகேசு தலைமையில் நடைபெற்றது. கராச்சிக் காரியாதிகாரி, வண. பிதா சுவாம்பிள்ளை உட்படப் பலர் இக்கலை விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கவியரங்கு, நாடகம், கர்நாடக சங்கீதம் என்பன விழாவில் இடம் பெற்றன.

— —

## பெ. ஆ. சங்கம் தீர்மானம்

வேலணை, புதன்

மண்கும்பான் அரசினர் பாடசாலை தலைமை ஆசிரியரை இடமாற்றம் செய்து அவரின் இடத்திற்கு வேறு தலைமை ஆசிரியரை நியமிக்கும்படி வடபிரதேச வித்தியாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் மண்கும்பான் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர்ஆசிரியர்சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

——

## மின்சாரம் விஸ்தரிக்கப்படும்


## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

**தேவை — எழுதுவினைஞர்** தரம் (II)

**வயது;** 23—27

**தகைமை:** சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்) ஒரே முறையில் 6 பாடங்களுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும், இவற்றில் எண்கணிதம் அல்லது கணிதம், தமிழ், ஒரு விஞ்ஞான பாடம் அல்லது குடியியல் அல்லது சரித்திரம் விசேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இவற்றில் ஒரு விசேட சித்தி பின்பும் பெற்றிருக்கலாம்) விண்ணப்பதாரர் ஆங்கில பாஷைப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சிச் சித்தி ஒரு கூடிய தகைமையாகக் கருதப்படும்.

**சம்பள விகிதம்;** ரூ 106/- — ரூ. 290/-

6/-X18; 7/-X4; 8/-XI-; 10/-X4

மாதச்சம்பளத்துடன் வங்கியினால் அளிக்கப்படும் படிகளும் வழங்கப்படும்.

**பிணைப்பணம்:** ரூ 1000/- விண்ணப்பதாரர் வங்கியோடு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டும்.

விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், சமீபத்தில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் முதலியவற்றின் பிரதிகளுடன் 20-11-69 -க்கு முன்பு கௌரவ காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கௌரவ காரியதரிசி;

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி,

59, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்

### பகிரங்க ஏல விற்பனவு

உடுப்பிட்டி கி. ச. பகுதி ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு சொந்தமான 22 ஸ்ரீ 3769 இலக்க ஒஸ்ரின் லொறி 23-11-69 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். 12-11-69 தொடக்கம் 21-11-69 மாலை 4 மணி வரை லொறியை மேற்படி சமாசத்தில் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். கேள்வியில் லொறி பெற்றவர் உடனடியாக 50 வீதப் பணத்தை ரொக்கமாக மேற்படி சமாசத்தில் கட்ட வேண்டும் மிகுதி 50 வீதப் பணத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்பு மேற்படி சமாசத்தில் ரொக்கமாகக் கட்டி லொறியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

1818 பொ. கணபதிப்பிள்ளை. தலைவர்


## பொலிஸாரைக் கண்டித்து கி.ச. தீர்மானம்

அனலைதீவு, புதன்

கடந்த 8ம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அனலைதீவு நோக்கிச்சென்று கொண்டிருந்த மோட்டார் படகை நடுக்கடலில் மறித்து பொலிசார் பிரயாணிகளைத் தகாதமுறையில் ஏசினராம்.

இதைக்கண்டித்து, உடனடி விசாரணை நடத்தும்படி 11ம் திகதி நடைபெற்ற அனலைதீவு கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதன் பிரதிகள் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டது,

## கிராமசபைத் தலைவர் முயற்சி

அனலைதீவு, புதன்

சீர்கேடான நிலையில் இயங்கிவரும் தீவுப்பகுதி படகு சேவையை சீர் திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ சுகததாசாவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளில் அனலைதீவு கிராமசபைத் தலைவர் திரு ஐ சபாபதிப்பிள்ளை தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

——

## நோயாளருக்கு அமைச்சர் உதவி

கோட்டை, புதன்

அரசினர் ஆஸ்பத்திரி


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி முத்துராமன் - வாணிஸ்ரீ நடித்த

குலவிளக்கு

ராஜா — யாழ்ப்பாணம்

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி

போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம் காலை 10-30 மணி

* ஜெய்சங்கர் * விஜயகுமாரி

முத்துராமன், வாணிஸ்ரீ, நாகேஷ் நடித்த

டீச்சரம்மா

வின்ஸர் (யாழ்ப்பாணம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நடித்த

# டீச்சரம்மா

## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

பட்டுமாமியின் யாழ்ப்பாண விஜயம்!

தென்னகத்திரைகளில்
100 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச்சித்திரம்
கலாகேந்திராவின்

# எதிர் நீச்சல்

கதை, வசனம் டைரக்ஷன்
கே. பாலசந்தர்

## யாழ். வெலிங்டன்

மற்றும்

6 சினிமாஸ் திரைகளில்

இப்பெ ழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ
★ சிவாஜி கணேசன்

நாட்டியப் பேரொளி
★ பத்மினி

காதல் ராணி
★ கே. ஆர். விஜயா

ஹாஸ்ய மன்னன்
★ நாகேஷ்

★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

# பாலாடை

டைரக்ஷன் — ஏ. பீம்சிங் பாடல் — கண்ணதாசன் இசையமைப்பு — கே. வி. மகாதேவன்

சேதமேற்பட்டது. பிரயாணிகள் காயமின்றித் தப்பினர்

வெடிகொளுத்திய சிறுவன் ஒருவன் சொற்பகாயங்களுடன் பருத்தித்துறைத் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறுன்

— —

## அமைச்சர் சந்தித்தார்

மல்லாகம், புதன்

மயிலிட்டிக் கிராமசபை மின்சார விஸ்தரிப்பு குறித்து காணி நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவை கிராமசபைத் தலைவர் திரு. என். கிருஷ்ணசாமி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கட்டுவன் மின்சார உபநிலைய விஸ்தரிப்புக்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இது விஷயமாக மின்சார இலாகாவினருடன் கிராமசபைத் தலைவர் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

— —

## கிராமவளர்ச்சிக்கு ச. ச. நிலையங்கள்

சித்தன்கேணி, புதன்

''எமது கிராமசபைப் பகுதியில் 20 சனசமூக நிலையங்கள் உள்ளன கிராமப்பகுதிகளின் வளர்ச்சி இத்தகைய மக்கள் ஸ்தாபனங்கள் மூலமே உருவாகும். இளைஞர்களின் ஒற்றுமையே இது ஸ்திரமடைய வழிகோலும்'' என வட்டுப்-பிலவத்தை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவர் திரு. ச. நிற்சிங்கம் கூறினர்

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி: 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

ஆதித்தன் — வசந்தா

நடித்த

விளக்கேற்றியவள்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45, P. M,

SEXY ALNEON
(Strictly for adults)

சுழிபுரம், வியாழன்

யாழ். மாவட்ட விவாக இறப்பு பிறப்பு பதிவுகாரர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டு உள்நாட்டு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பின்னர் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவர் திரு. சி. முத்துக்குமாரசாமி மானிப்பாய் உப தலைவர். திருமதி. சிவானந்தவல்லி அம்மாள் சங்கரப்பிள்ளை. காரியதரிசி திரு. கே. கிருஷ்ணர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இசை, மக்கள் முதல் மாக்கள் வரையான ஜீவன்கள் ரசிக்கக்கூடியது. இத்தகைய இனிய இசை, சினிமா சங்கீதத்தினல் மாசுபடாமல் காப்பாற்றவேண்டும்''

இவ்வாறு தீபாவளித் திருநாளையொட்டி பிலவத்தை இளைஞர்களால் நடாத்தப்பட்ட இசை விழாவின் 2ம் நாள் விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஆசிரியர் திரு. கி. தாமோதரம்பிள்ளை குறிப்பிட்டார்.

விழா அமைப்பாளர் திரு. ம. ஐயம்பிள்ளை நன்றி கூறினர்.

கொள்ளும் தீர்மானம் மண்கும்பான் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற பெற்றேர்ஆசிரியர்சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

——

## மின்சாரம் விஸ்தரிக்கப்படும்

கோப்பாய், புதன்

கோப்பாய் பகுதியில் மின் விநியோகம் விஸ்தரிக்கப் படவுள்ளது. இதற்கான உபமின் பரிவர்த்தனை நிலையமொன்று ராஜவீதியில் நிறுவப்படுமெனத் தெரிகிறது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் கோப்பாய்கி.ச. தலைவர் திரு. ரி. பரமானந்தராசா மேற்கொண்டுள்ளார்.

னடி விசாரணை நடத்தும்படி 11ம் திகதி நடைபெற்ற அனலைதீவு கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது'இதன் பிரதிகள் வடமாகாண பொலிஸ் அதிபர் திரு சுந்தரலிங்கத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டது, கிராமசபைத்தலைவர் திரு, ஐ சபாபதிப்பிள்ளை தலைமையில் இக் கூட்டம் நடந்தது.

ள்ளார்.

——

## நோயாளருக்கு அமைச்சர் உதவி

கோட்டை, புதன்

அரசினர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சகல நோயாளருக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து தினமும் ஒருவேளைக் காவது சோறு வழங்க சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 28-ந் திகதி (13-11-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடவிருப்பீர்கள. விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.

**ரிஷபம்**- ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப் பிணக்குகளால் கவலை தோன்றக் கூடும், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடமுண்டு. பொறுமை நன்று

**மிதுனம்** தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடம் உண்டு கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதிய நண்பர்கள் சேருவார்கள்.

**கடகம்**- வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ளநேரிடலாம், அவசரப் போக்கினுல் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும். சகோதரவழியாலும் சஞ்சலம் உண்டு.

**சிம்மம்**- தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்றேர்களாயின் ஆதரவும் கிடைக்கும் தொழில் துறையிலும் வெற்றி உண்டு.

**கன்னி**- உத்தியோக உயர்விற்கு இடமுண்டு. சிலருக்கு புதிதாக தொழில் வாய்ப்புக்கு இடம் உண்டு, நீண்ட நாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும் செய் கருமத்தில் தெய்வத்தின் துணையும் உண்டு.

**துலாம்**- கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும். புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். தொழில்துறையில் இடமாற்றத்திற்கும் இடமுண்டு. வெளியூர்ப் பயணமும் ஏற்படலாம்.

**விருச்சிகம்**- நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடம் உண்டு. உடல் நலன் சிறிது பாதிக்கப்படலாம்.

**தனுசு**- மனப் போராட்டம் அதிகரிக்கும், உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம். பிள்ளையொன்றின் உடன்நலம் பாதிக்கப்படலாம். பொறுமை நன்று.

**மகரம்**- வார்த்தைஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளருக்கு சிறப்பான தினம் இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும், சிலருக்கு பொதுசன தலைமையும் கிடைக்கலாம்

**கும்பம்**- பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில்துறையிலும் பின்தங்க நேரிடும் சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடம் உண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

**மீனம்**- நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல்வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக்கொள்வர்.

புகையிலை, தென்னை,
காய்கறிப் பயிர்களைப்
பாதிக்கும்
இந்தப் பூச்சி
புழுக்களை
அழித்து உங்கள்
பண வருவாயைப்
பாதுகாக்க,



# மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்'




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றொழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ்—ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர்:
பேயர்,
ஜேர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.

P.9157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர்களின் சமரச முயற்சி மீண்டும் தோல்வியுற்றது

## 6 மணி நேரம் ஆலோசித்த பின் முடிவில்லாமல் கலைந்துசென்றனர்

புதுடில்லி, நவம்பர் 12

**காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் சமரசம் ஏற்படுத்துவதற்காக காங்கிரஸ் முதலமைச்சர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மீண்டும் தோல்வியில் முடிந்திருக்கின்றன.**

கடந்த இரவு சுமார் ஆறு மணி நேரம் காங்கிரஸ் முதலமைச்சர்கள்கூடி ஆலோசனைகள் நடத்தினார்கள். இந்தக்கூட்டம் ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. சுகாடியாவின் முயற்சியின் மீது ராஜஸ்தான் மாளிகையில் நடைபெற்றது. இன்று அதிகாலை இரண்டு மணிக்கு எதுவித தீர்க்கமான முடிவும் இல்லாமல் முதலமைச்சர்கள் கலைந்து சென்றார்கள்.

முதலமைச்சர்கள் வெளியேறியபோது, நிருபர்கள் திரு. சுகாடியாவை அணுகி விபரம் கேட்டபோது முதலமைச்சர்களால் சமரசத்துக்கான அடிப்படை எதையும் உருவாக்க இயலவில்லையென்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர்கள் மீண்டும் கூடுவார்களா என்று வினவியபோது அவசியம் ஏற்பட்டால் கூடுவார்கள் என்றும், ஆனால் அதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் திரு. சுக்காடியா கூறினார். இந்தக் கூட்டத்தில் திரு. ராம் சுபாக்சிங்கும் கலந்துகொண்டார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி நேற்றுப் பிற்பகல் கூடி முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசித்தது. இந்தக் கூட்டத்தில் திரு. நிஜலிங்கப்பாவின் தலைமையில் பதினொரு காரியக் கமிட்டி அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள். திருமதி இந்திரா காந்தியும் அவரது சகாக்களும் கலந்துகொள்ளவில்லை. இன்று காலையில் காரியக்கமிட்டி கூடி மிகமுக்கியமான முடிவுகள் எடுக்க விருப்பதாக திரு. நிஜலிங்கப்பா கூறினார்.

## பேச்சு வார்த்தை முறிந்ததற்கு யார் காரணம்?

புதுடில்லி, நவ 12

''அண்மையில் தனக்கும் திரு. நிஜலிங்கப்பாவுக்குமிடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்ததற்கு காரணம், அவர் எதையும் விட்டுக்கொடுக்க மறுத்ததுதான்'' என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஆட்சிமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களிடம் நம்பிக்கை வாக்குப் பெறுவதையோ அல்லது ஆட்சி மன்றத்தைக் கலைப்பதையோ தாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் இந்நெருக்கடியை காங்கி எவருடனும் தான் கடமையாற்றத் தயாராக இருப்பதாகவும், தான் கம்யூனிஸ்டாகவோ, சர்வாதிகாரியாகவோ வர விரும்பவில்லையெனவும், காங்கிரஸின் எல்லா மட்டத்திலும் தேர்தல் நடத்தத் தான் தயாராக விருப்பதாகவும் மாருக சின்டிக்கேட்டினர்தான், மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டதற்காக சுப்பிரமணியம் போன்றவர்களை வெளியேற்றி சர்வாதிகாரமாக நடந்துகொள்வதாகவும், பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளையில் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவோ, தமக்கும் பிரதமருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்ததற்குக் காரணம் பிரதமர்தான் என்று குற்றம்சாட்டியிருப்பதால் அவர்களைச் சுலபமாக நிர்ப்பந்திக்கலாமென்ற எண்ணம் தான் என்றும் அதற்குக்கூடத்தான்சம் மதித்ததாகவும் திரு. நிஜலிங்கப்பா கூறினார்.

பிரதமர் இந்திராகாந்தி தம்மீது சுமத்திய பல குற்றச்சாட்டுகளை திரு. நிஜலிங்கப்பா இப்பேட்டியில் மறுத்திருக்கிறார்.

அ. இ. கா. கமிட்டியைக் கூட்டவேண்டுமென்ற கையெழுத்து வேட்டையில் அதிகாரப்பதவிகளிலிருப்பவர்கள் நடந்துகொண்ட விதம் எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. அவர்கள் தயாரித்த கையெழுத்துப் பட்டியலில் தாங்கள் கையெழுத்துப் போடவில்லையென்றும் அவைகள் போலிக் கையெழுத்துக்களென்றும், என்னி

## 'தி.மு.க.வை விலைக்கு வாங்கிவிட்டார்'

ஆதமாபாத், நவ. 11

தி.மு.கழகத்தை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விலைக்குவாங்கிவிட்டதாக சுதந்திரக்கட்சி ஆட்சி மன்ற உறுப்பினர் பாலு மோடி கூறியுள்ளார்.

## விபத்தில் சாரதி மரணம்

விருத்தாசலம், நவ. 12

சென்னையைச் சேர்ந்த பார்சல் லொறிஒன்று மரமொன்றில் மோதியதால் சாரதி ஜி. கிருஷ்ணமூர்த்தி இறந்ததாகவும் கிளீனர் காயங்களுக் குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சூயஸிற்கு குறுக்கே

## தினம் தோறும் விமானச் சண்டை

கெய்ரோ, நவ. 12

சூயஸ் கால்வாயின் குறுக்கே நேற்று இஸ்ரேல் சண்டை விமானங்கள் பறந்து எகிப்திய நிலைகள்மீது குண்டுகள் வீசின. இதனை எகிப்திய விமானங்கள் எதிர்த்துக் கடுமையான சண்டையில் ஈடுபட்டன.

இந்தச் சண்டையில் இரண்டு இஸ்ரேலிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாக எகிப்தியர் அறிவித்தனர். இந்தப் பகுதியில் கடந்த சில மாதங்களாக இஸ்ரேலியப் போர் விமானங்கள் அனேகமாகத் தினமும் தாக்குதல்களை நடத்திவருவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

நேற்றைய சண்டையில் மூன்று எகிப்திய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியபின் இஸ்ரேலிய விமானங்கள் பத்திரமாகத் திரும்பிவிட்டதாக டெல்அவிவில் அறிவிக்கப்பட்டது.

## யாஹ்யஹானுக்கு டிட்டோ அழைப்பு

பெல்கிரேட், நவ. 12

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யஹானை தமது நாட்டுக்கு விஜயஞ்செய்யும்படி யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ அழைப்பு விடுத்திருக்கிறார்.

## எட்மண்ட் உரை

மல்லாகம், புதன்

சுன்னுகம் பட்டண சபை ஆராய்வுக்குழுக் கருத்தரங்குத் தொடரில் இம்மாதம் 15-ம் திகதி மாலை பட்டண சபை விளையாட்டு அரங்கில் திரு. எட்மண்ட் சமரக்கொடி ''பொதுஉடைமை அரசின் அமைப்பு'' என்று பொருள்பற்றி உரை நிகழ்த்துவார்.

பிரிட்டிஷ் ராணியின் குடும்பச் செலவுகள்

## ஆராயக் குழு நியமிக்கப்படும்

# பாகிஸ்தான் இந்தியாவுக்கு மீண்டும் ஆயுத விற்பனை

## அமெரிக்கா ஆலோசனை

நியுயோர்க், நவ. 12

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அமெரிக்க ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மறுபரிசீலனை செய்து மறுபடியும் ஆயுத விற்பனையைத் தொடங்கும்படி அமெரிக்க நிர்வாகத்தை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை வெளிவிவகாரக் கமிட்டி கேட்டுள்ளது. அந்நிய உதவிக்கான 190 கோடி டாலருக்கான மசோதா பற்றித் தன்னுடைய அறிக்கையில் கமிட்டி இந்தச் சிபார்சை வெளியிட்டுள்ளது

கமிட்டியின் சிபார்சில் இந்தியாவும் பாகிஸ்தானும் சமமாகப் பாவிக்கப்பட்டுள்ளபோதிலும் மீண்டும் ஆயுத விற்பனை ஆரம்பிக்கப்பட்டால், பாகிஸ்தான் தான் முக்கியமாக அனுகூலமடையும் இத்தகைய ஆயுத விற்பனையை எதிர்த்து இந்தியா முறையிட்டுக்கொண்டுள்ளது. ஆயுத விற்பனையை மீண்டும் தொடங்கும் விடயம் இன்னமும் பரிசீலனையில் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் இதுவரை கூறி வந்தனர்.

பரிசீலனையை முடிப்பதில் நிர்வாகம் எவ்வித அவசரமும் காட்டவில்லை. 2 நாடுகளுக்கும் சில இராணுவ ஆயுதங்களையும், தளபாடங்களையும் அனுப்புவது தேச நலனுக்கு உகந்தாயிருக்கலாம் என கமிட்டி அக்றிகையில் தெரிவித்துள்ளது.

# சீன - சோவியத் பேச்சில் தாமதம்?

மாஸ்கோ, நவ 12

பீக்கிங்கில் சோவியத்யூனியனுக்கும் சீன அரசாங்கத்துக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் மிகவும் மெதுவாக நடைபெறுவதாகவும், இதற்கு சீனத் தலைவர்களுக்கிடையில் கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டிருப்பதே காரணம் என்றும் மாஸ்கோவில் கருதப்படுகின்றது.

சீன சோவியத் எல்லைத் தகராறுகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவரும் அதேசமயம் சோவியத் யூனியனுக்கு எதிராக படைதிரட்டும் பிரசாரங்களும் சீனவில் நடைபெறுவதாக் கூறப்படுகின்றது. சீன சோவியத் தகராறுகளில் சமரசம் ஏற்படுத்திக் கொள்வதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரம் எதுவும் இன்னமும்தெரியவரவில்லை. இருதரப்பினரும் இதுவரைக்கும் இதுபற்றிய விபரங்களை வெளியிடாமலே இருந்து வருகின்றனர்.

## 'பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் நிறுவவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா

பனம் பொருள்ஆராய்ச்சி நிலையம் ஒன்று தென்மராட்சியில் நிறுவப்பட வேண்டும் தென்னை ஆராய்ச்சி நிலையம், றப்பர் ஆராய்ச்சி நிலையம் இருப்பதுபோல பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் இருக்கவேண்டும்

வரணி வடக்கில் நேற்று நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில், முன்னாள் எம் பி திரு வி குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு எஸ் கயிலாயர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு வி குமாரசாமி மேலும் கூறியதாவது பனம் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்த முடியும்.

பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இங்கு நிறுவுவதன் மூலம் அநேக வாலிபர்களுக்கு குறிப்பாக ஹரிஜன வாலிபர்களுக்கு வேலை வழங்கலாம் இதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது தீர்க்க முடியும்.

திருவாளர்கள் வி ஆனந்த சங்கரி, ராஜகுலசிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

## கென்யாவில் டிசம்பர் மாதம் பொதுத்தேர்தல்

நைரோபி நவ 12

கென்யாவில் பொதுத் தேர்தல்கள் டிசம்பர் மாதம் 6 ம் திகதி நடைபெறும், இதை கென்யா அதிபர் திரு ஜோமோகென்யாட்டாஅறிவித்தார். கென்யா சுதந்திரமடைந்த பின்னர் நடைபெறும்முதலாவது பொதுத் தேர்தல் இதுவேயாகும் இந்தத் தேர்தலில் அரசியல் கட்சி என்ற முறையில் இப்பொழுது ஆட்சி நடத்தும் கட்சிமட்டுமே போட்டியிடும் கென்யாவிலுள்ள எதிர்க்கட்சியை அண்மையில் திரு கென்யாட்டா தடை செய்தார்.

தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிராகப் போட்டியிடும் அனைவரும் கட்சி சின்னம் இன்றி போட்டியிடுவார்கள் என்று தெரிகின்றது. குறைந்தது ஆயிரம் வேட்பாளர்கள் தேர்தலில் கலந்து கொள்வார்கள்.

## 60 லட்சம் பெண் சாரணர்

லண்டன், நவ. 12

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனில் ஆரம்பமான பெண்சாராணர் இயக்கம், உலகின் 87 நாடுகளில் பரவி, இப்பொழுது 60 லட்சம் பெண் சாரணர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு விரிவடைந்துள்ளது.

பிரிட்டனில் இவ்வியக்கத்தின் அங்கத்தவர் தொகை வருடாவருடம் பெருமளவில் அதிகரித்துவருகிறது. தற்பொழுது அங்கே 721,191 பெண் சாரணர்கள் உள்ளனர்என்பது குறிப்பிடத்தக்கது.

1909-ம் ஆண்டு ஆரம்பமான சாரணர் இயக்கத்தை பெண்களுக்காகநெறிப்படுத்தியவர் செல்வி பேடன் பவல் என்பவராவர். இவர் பெண் சாரணர்க்காக கைநூல் ஒன்றையும் வெளியிட்டார்.

## தொழிலாளர் மரணம்

கோவை, நவ. 12

கோயம்புத்தூருக்கு வடக்கே செங்கம்பள்ளத்திற்கு குறுக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஆட்சிமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களிடம் நம்பிக்கை வாக்குப் பெறுவதையோ அல்லது ஆட்சி மன்றத்தைக் கலைப்பதையோ தாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் இந்நெருக்கடியை காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவாகக் தான் கருதவில்லையென்றும் இதற்கு முன்பே ஒரிஸ்ஸா, வங்காளம், கேரளா போன்ற மாநிலங்களில் இரு குழுக்கள் இயங்கி வருகின்றன வென்றும் இமையை நாட்டின் நிலையான தன்ஞபாசிக்காதென்றும் கூறினர்.

அறுபது நிமிடம் நடைபெற்ற இப் போட்டியில் நிருபர்களின் பல கேள்விகளுக்கு திருமதி இந்திரா பதிலளித்தார்

உடன்பாட்டிற்காக கருத்து மாறுபாடு கொண்ட ... நடந்து கொள்வதாகவும், பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளையில் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவோ, தமக்கும் பிரதமருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்ததற்குக் காரணம் பிரதமர்தான் என்று குற்றம்சாட்டியிருக்கிருர். பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிருர்

மண்டலக் கமிட்டிகளிலிருந்து அ இ கா கமிட்டி வரை எல்லாத் தேர்தல்களையும் ஜனநாயக முறைப்படி தாம் நடத்த விரும்பியதாகவும் அதேவேளையில் பிரதமர் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து தேர்தலை நடத்திஞல் போதுமென்று தெரிவித்ததாகவும் அதற்குக் காரணம் அக்கமிட்டிகளில் உறுப்பினர்கள் குறை...

...வர்கள் நடந்துகொண்ட விதம் எனக்கு மிகுந்த வேதனையளிக்கிறது. அவர்கள் தயாரித்த கையெழுத்துப் பட்டியலில் தாங்கள் கையெழுத்துப் போடவில்லையென்றும் அவைகள் போலிக் கையெழுத்துக்களென்றும், என்னிடம் ஒருசிலர் புகார் தெரிவித்திருக்கிருர்கள். மேலும், காங்கிரஸ் ஸ்தாபனத் தேர்தல்களை நடத்துவதற்கு நான் தடையாக இருக்கவில்லை. ஆறுமாதத்திற்குள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக பிரதமரிடமே தெரிவித்திருக்கிறேன். ஒரு சில மாதங்கள் தாமதமாஞல் காங்கிரஸ் கட்சியே குடி முழுகிப் போய் விடுமா? இத் தாமதத்திஞல் பொருளாதாரத்திட்டங்கள் பாதிக்கப்படுமென்பது பெரும் பேதமை என்ருர் அவர்

## ஐ. நா வில்

# சீனவை அமர்த்தும் முயற்சி மீண்டும் தோல்வி

நியுயோர்க், டிச. 12

ஐ. நா. வில் கம்யூனிஸ்ட் சீனவை அமர்த்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி இம்முறையும் தோல்வியில்முடிந்தது.

தேசிய சீனவை வெளியேற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஐ. நா.வில் மக்கள் சீனக் குடியரசுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானம் இம்முறையும் மகாசபைக் கூட்டத்தில் தோல்வியுற்றது. ஆனல் இம்முறை கடந்த ஆண்டைவிட சீனவுக்கு ஆதரவு கூடியிருப்பதாகத் தெரிகின்றது.

தீர்மானத்தை இம்முறை ஆதரித்து 48 நாடுகளும் எதிர்த்து 56 நாடுகளும் வாக்களித்தன. 21 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. சீனவை ஆதயுத்து மூன்றில் இரு பகுதியினர் வாக்களித்திருந்தால் இடம் கிடைத்திருக்கும் என்று கருதப்படுகின்றது பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா போன்றநாடுகள் சீனவுக்கு சாதகமாக வாக்களித்தன. ஆனல் சோவியத்யூனியன் தீர்மாத்தின் மீதுஇம்முறைஉரைநிகழ்த்தவில்லை. அமெரிக்கா தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தது.

— —

### மாதவன் மறுப்பு

சென்னை, நவ.11

கோட், அல்லது சட்டத்தின் மூலம், காவேரி தண்ணீர் பற்றிய பிரச்னைக்குதான் தீர்வுகாணப் போவதாக பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளை அமைச்சர் மாதவன் மறுத்துள்ளார்.

## வியட்னும் போர் எதிர்ப்பு:

# நியூயோர்க்கில் குண்டுவெடிப்பு

நியுயோர்க், நவ,12

வியட்னும் போருக்கு எதிராக நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டங்களின் முன்னேடியாக நேற்று நியுயோர்க்கில் மூன்று இடங்களில் குண்டுகள்வெடித்தன. வியட்னும் போரிஞல் ஆதாயம் பெறும் பெரிய வியாபார ஸ்தாபனங்களுக்கு எதிராக இந்த குண்டுகள் வெடிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றன. வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் சுமார் இரண்டுலட்சம் பேர் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ. நா. கட்டிடத்திலும் நேற்று ஒரு குண்டு வெடிக்கக்கூடும் என்று வதந்தி பரவியது ஆனல் அப்படி எதுவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை

எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் வாஷிங்டன் வெள்ளை மாளிகையைக் கடந்துபவனியாகப் போவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிருர்கள். இதன் காரணமாக அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆர்ப்பாட்டம் நடத்தவிருப்பவர்கள் அதிபர் நிக்ஸனுடன் பேட்டியொன்றுக்கு கோரிக்கை விடுத்தனர். ஆனல் இந்தக் கோரிக்கை மறுக்கப்பட்டது.

## குடும்பச் செலவுகள்

# ஆராயக் குழு நியமிக்கப்படும்



லண்டன், நவ. 12

பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணியின் குடும்பச் செலவீனங்கள் போன்ற நிதி அம்சங்கள் பற்றி ஆராய பிரிட்டிஷ் ஆட்சி மன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படும், இத்தகவலை பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் காமன் சபையில் அறிவித்தார். மகாராணியின் குடும்பச்செலவுகளுக்கு இப்பொழுது அளிக்கப்பட்டுவரும் நிதிவசதிகள் பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் இருந்த செலவுகளுக்கேற்ப செய்யப்பட்ட ஏற்பாடு என்றும், இது இப்போதைய நிலைமைக்குக் கட்டுப்படியாக வில்லையென்றும் அண்மையில் மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் அமெரிக்க டெலிவிஷன் பேட்டி ஒன்றில் கூறியிருந்தார். இதன் காரணமாகவே இப்பொழுது பிரிட்டிஷ் பிரதமர் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிருர். பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தின் தெரிவுக்குழு அடுத்த ஆட்சி மன்ற காலத்தில் மகாராணியின் குடும்பச்செலவுகள் பற்றி ஆராயுமென்று பிரிட்டிஷ் பிரதமர் கூறினர்.

# நைஜீரிய இனக் குரோதம் பிரிட்டிஷ் பிரதமர் கவலை

லண்டன், நவ. 12

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்சன், லண்டன் விருந்துபசாரமொன்றில் பேசுகையில் நைஜீரியாவின் அவலநிலை குறித்து கவலை தெரிவித்தார். புராதன நாகரீகமும், இயற்கை வளமும் நிறைந்த இந்நாட்டில், இனக்குரோத யுத்தம் தாண்டவமாடுவது மிகவும் வருந்தத்தக்கதென திரு வில்சன் எடுத்துரைத்தார்.

'பிரிட்டிஷ் சமரச முயற்சிகள் இந்நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட முடியுமாயின், அதற்கான மார்க்கங்களை கையாளநாம் ஆயத்தமாகஇருக்கிறேம். ஆனல் சமரச முயற்சிகள் வெற்றி பெறவேண்டுமாயின் அவை ஆபிரிக்க நேச நாடுகள் மூலமாகவே மேற்கொள்ளப்படல்வேண்டும்' என்று திரு வில்சன் தொடர்ந்து கூறினர்.

பிரிட்டிஷ்பிரதமர் மேலும் பேசுகையில், ஆபிரிக்க நாடுகள் இனவேறுபாட்டால் துண்டாடப்படுவதை எந்த ஆபிரிக்கநாடும் விரும்பவில்லை எனக் குறிப்பிட்டு நைஜீரிய நெருக்கடி சாம்ராஜ்யத்திற்கு மட்டுமன்றி ஆபிரிக்காவிற்கும், முழுஉலகத்திற்குமே பெரும்வேதனை தரும் நிகழ்ச்சியாகுமென எடுத்துரைத்தார்

## 22-ம் திகதி பரீட்சை

மாவிட்டபுரம், புதன்

வடஇலங்கை தமிழாசிரிய சங்க ஐந்தாம்தரப்பரீட்சை இம்மாதம் 22ம் திகதிநடைபெறவிருக்கிறது.

400க்கு மேற்பட்ட பாடசாலைகளிருந்து 11,000க்கு மேற்பட்டோர் கலந்துகொள்ளும் இப் பரீட்சை 180 நிலையங்களில் நடைபெறுமெனவும் இம்முறை சமயபாடமும் ஒரு பாடமாகக் கருதப்படும் என்றும் பரீட்சைக் காரியதரிசி திரு வீ வ நல்லதம்பி தெரிவித்தார்.

...வரணி வடக்கில் நேற்று நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில், முன்னுள் எம் பி திரு வி குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு எஸ் கயிலாயர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு வி குமார...ர்களுக்கு குறிப்பாக ஹரிஜன வாலிபர்களுக்கு வேலை வழங்கலாம் இதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது தீர்க்க முடியும்.

திருவாளர்கள் வி ஆனந்த சங்கரி, ராஜகுலசிங்கம் ஆகியோரும் பேசினர்கள்.

# மாணவரிடையே அமைதியின்மை: பேராசிரியர் கருத்து

மல்லாகம், வியா.

'நமது நட்டில்மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் தற்போது மாணவ சமுதாயத்தினர் மத்தியில்அமைதியின்மை குழம்பகரமான நிலை நிலவுகின்றது.

இந்நிலை மாற அடிப்படையில் நல்ல பழக்கவழக்கங்களும் கடின உழைப்பும் சிறந்த கல்வியும் மாணவருக்கு வேண்டும்' என இலங்கைப் பல்கலைக்கழக கணிதத் துறைப் பேராசிரியர் கலாநிதி கே. எஸ். கங்காதரன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்ற 16-வது வருடாந்த விருந்துபசார வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். மாணவர் மன்றத்தலைவர் திரு ஏ. ஈஸ்வரன் தலைமை வகித்தார்.

கல்லூரி அதிபர் திரு ரி ரி. ஜெயரத்தினம் பேசுகையில் மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாது தமது கல்விஸ்தாபனங்களின் உயர்ந்த லட்சியம் நிறைவேறும் வண்ணம் வாழ்க்கை நடத்த வேண்டுமெனக் கூறினர்.

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சண்முகநாதன், வட்டார வித்தியாதிகாரி திரு கே. சோமசுந்தரம் ஆகியோடும் பேசினர்.

# 'பெண்கள் இருப்பதால்தான் சைவம் வளர்கிறது'

உடுப்பிட்டி, புதன்

"சமய வாழ்வின் அவசியத்தைத் தாய்மார்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து வாழவேண்டும். எமது நாட்டில் பெண்கள் இருப்பதிஞலேயே சைவசமயம் வளர்ந்து வருகின்றது பெண்கள் தமது சைவநெறி ஒழுக்கம் மூலம் குழந்தைகட்குச் சைவத்தின் மகிமையை உணர்த்த வேண்டும். உள்ளத்தில் தெய்வ பக்தி இருந்தால் எவ்வித கஷ்டமும் எம்மை அணுகாது"

இவ்வாறு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தென் கருணை இந்து வாலிபர் சங்கம் நடாத்திய தீபாவளி விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர். கரணவாய் மகா வித்தியாலய மண்டபத்தில் விழா நடைபெற்றது.

வித்துவான் கே. கார்த்திகேசு, கொழும்பு வழக்கறிஞர் திரு. மு. திருநாவுக்கரசு, திரு ஆ. தம்ப்பாபிள்ளை ஆகியோரும் பேசினர்.

திரு. சி. மு. தயானந்தன் வரவேற்புரை நிகழ்த்திஞர். துணைச் செயலாளர் திரு. எச். தெய்வமணி நன்றியுரை கூறினர்.

நெல்லை க. பேரன் நாடகக் குழுவினரின் 'தம்பி என்ன கொழும்பாலையோ' என்னும் நாடகமும், தென் கருணை இந்து வாலிபர் சங்கத்தினரின் 'காலம் மாறிப் போச்சு' என்னும் நாடகமும் இடம் பெற்றன.

## வீதி திருத்த நடவடிக்கை

மல்லாகம், புதன்

காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீமன்காமம் இளைஞர் சங்கத்திற்கு விஜயம் செய்து வீமன்காமம் கிராமத்தில் பிரதான வீதியைச் செப்பனிடும் நடவடிக்கைகள் குறித்து சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடாத்திஞர். மயிலிட்டிக் கிராம சபை அங்கத்தவர் திரு. க. மகாலிங்கம் பிரஸ்தாப வீதியைப் பகிரங்க வேலைப் பகுதியிடம் கையளிக்க வேண்டும் அல்லது விசேஷநன்கொடை பெற்று சீர்திருத்தம் செய்ய வேண்டும் என எம். பி. யிடம் கேட்டுக்கொண்டார்.

## தொழிலாளர் மரணம்

கோவை, நவ. 12

கோயம்புத்தூருக்கு வடக்கே செங்கம்பள்ளத்திற்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் இடிந்து விழுந்ததில் இரண்டு தொழிலாளர்கள் மரணமாஞர்கள்.

## விமானங்கள் வீழ்ந்தன

டெல்அவிவ், நவ 12

சூயஸ்கால்வாய்க்கு மேலே எகிப்து விமானங்கள் மூன்றை இஸ்ரேல் இன்று சுட்டு வீழ்த்தியதாக டெல்அவிவ் செய்திகள் தெரிவித்தன இந்த விமானங்கள் ரஷ்யா வால் எகிப்துக்கு கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

## கி. அ. சபை உத்தியோகஸ்தர்

அல்லைப்பிட்டி, புதன்

அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக திரு. வி. கணபதிப்பிள்ளையும், உபதலைவராக செ. சரவணமுத்துவும், காரியதரிசியாக வை. குணரத்தினமும், துணைக்காரியதரிசியாக பொ. இராசரத்தினமும், பொருளாளராக செ. இந்திரசித்துவும்தெரிவுசெய்யப்பட்டனர்.

## முனீர்ஸ் பரிசு

யாழ்ப்பாணம். வியா

யாழ்ப்பாணம் கே கே எஸ் வீதி முனிர்ஸ் ஸ்தாபனத்தார் தீபாவளியை முன்னிட்டு நடத்திய அதிர்ஷ்ட விற்பனையில் முதல் மூன்று பரிசுகளையும் முறையே பின்வருவோர் பெறுகின்றனர்.

திரு குமரேசு வல்லிபுரம் இடைக்காடு அச்சுவேலி, செல்வி ஆர் அப்புத்துரை, வட்டுக்கோட்டை, திருமதி ஆர் தனகுலசிங்கம் யாழ்ப்பாணம்.

## பிரஜாவுரிமை பெற்றோர்

கோட்டை, புதன்

இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி. இதுவரை 52,000 பேருககு பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

பிரஜாவுரிமை வழங்கப்பட்டவர்களில் 27,727பேர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியுள்ளதாகவும் த்கவல் தெரிவிககப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமயத்தின் பார்வையில் எல்லோரும் சமமே. கல்வி, அறிவு, செல்வம் உடையவர்கள் இல்லாதவர்களை விட மேலானவர்கள் என்று உரிமை கொண்டாட முடியாது. —மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 28-ந் திகதி (13 - 11 - 69)


## இந்தியாவின் அரசியல்—2

இந்தியாவில் ஆளும் கட்சியாக இருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் இரு கோஷ்டிகளாக இன்றுபிளவு பட்டுள்ளது ஒன்றுக்கு பிரதமர் இந்திராகாந்தியும், மற்றொன்றுக்கு காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பாவும் தலைமை வகிக்கின்றனர். கொள்கை, வேலைத்திட்டம் அவசரமாகச் செய்ய வேண்டிய பணி. அவற்றை அமுலுக்குக் கொண்டுவரும் முறை இவைபற்றி இவ்விரு கோஷ்டியினருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையிலே இந்த வேற்றுமைகளை ஓரளவு தவிர்க்க முடியாதென்றும் கருதலாம். இலங்கை போன்ற ஒரு நட்பு நாட்டைச் சேர்ந்தநாம் இந்தியாவின் இன்றைய அரசியல் சிக்கல்களும் நல்லபடியாகத் தீரவேண்டுமென்று உண்மையாக விரும்புவது நமது கடமையாகும். இந்தியா, பாகிஸ்தான் இவ்விரு அண்டை நாடுகளுடனும் நமக்கு நெருங்கிய நட்புத் தொடர்புண்டு ஆகவே அங்கு நடப்பவை பற்றி நாம் அவசரப்பட்டு குறை கூறவோ பாராட்டவோ செய்வது சரியாகாது.

உடனடியாக இந்தியாவில் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி பலவித கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. 'ஹிந்துஸ்தான்டைம்ஸ்' எனும் பிரபல பத்திரிகை இந்திய பார்லிமெண்ட் சபைக்கு உடனே பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுள்ளது. ஜனசங்கத்தின் தலைவரான ஸ்ரீவாஜ்பாயோ ஆட்சி உரிமையை காங்கிரஸ்இழந்துவிட்டதென்றும், அந்த ஸ்தாபனத்தில் ஏற்பட்டுள்ள பிளவே இதற்கு காரணமென்றும் கூறுகின்றார். இந்திய ஜனதிபதி எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஜனசங் தலைவர்களை அழைத்து மாற்று அரசாங்கம் அமைக்கும்படி கேட்கவேண்டுமென்றும் இப்

தேகிக்கின்றார். அவர் காங்கிரஸையும் ஸ்ரீமதி இந்திரா காந்தியையும் பற்றி கடுமையாகக்கண்டித்து எழுதியும் பேசியும் வருகின்றாராயினும் பொதுத் தேர்தல் நடத்துவதையோ மாற்று அரசாங்கம் அமைப்பதையோ அவர் ஆதரிக்கவில்லை. ஆகவே இந்தியபார்லிமெண்டின் எதிர்காலம் பற்றியும் உடன் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது குறித்து மூன்றுவித முக்கிய கருத்துக்கள் நிலவுகின்றன.

பிரதமர்இந்திராகாந்திக்கு இப்போது ஏற்பட்டுள்ள பெரும் பளுவைக்குறித்து சமீபத்திலே ஒரு வெளி நாட்டுப் பத்திரிகை எழுதுகையில் அமெரிக்க ஜனதிபதி நிக்ஸனுக்கும் ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கும் புது சீனத் தலைவரான மா-சே-துங்குக்கும் மிகப்பெரிய பிரச்னைகளும் பொறுப்புகளும்இருப்பதாகவும் அவர்கள் கூட இன்று இந்திராகாந்தியுடன் இடம் மாற்றிக்கொள்ள விரும்பமாட்டார்கள் என்று சரியாகக் குறிப்பிட்டுள்ளது.

இன்று இந்தியாவின் தலைமைக்கு ஏற்பட்டுள்ள பெரும் சுமையை இதிலிருந்து உணரலாம்,

இச் சமயத்திலே திரு வி. வி. கிரி போன்ற ஒரு பழுத்த அரசியல் ஞானி இந்தியாவின் ஜனதிபதியாக இருப்பது அதிஷ்ட வசமென்றே கூறவேண்டும், இலங்கையிலுள்ள நமக்கு அவரைப் பற்றி ஓரளவு தெரியும் பாக்கியமுண்டு. ஜனதிபதியான திரு கிரி அவர்கள் இன்று இந்தியாவில் நிலவும் மிகச் சங்கடமான அரசியல் நிலையை மேம்படுத்த தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அங்குள்ள நெருக்கடியைத் தீர்க்க உதவுவார் என்று எதிர் பார்க்கலாம்.

இதே சமயம் காலஞ்சென்ற காயிதே ஆஜம் ஜின்னா அவர்கள் பாகிஸ்தானிலே ஜனநாயக பார்லிமெண்ட் முறையை ஏற்ப

### கச்சியப்ப சுவாமிகள் கவித்திறன்

# காப்பின் நோக்கமும் புராணபடன முறைமையும்

இப்போது ஸ்கந்தசஷ்டி விரதகாலம். பல இடங்களிலே சிறப்பாக யாழ்ப்பாணத்தில் கந்தபுராணபடனம் நடைபெறுகிறது. முறையாக குருமுகமாக இருந்து இப்புராணத்தைப் பயின்ற பிரம்மஸ்ரீ ஆத்மநாத சர்மா அவர்கள் 32 வருடகாலமாகத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இப்புராணத்துக்குப் பயன் சொல்லிவருகின்றார்கள். கந்தபுராணபடனம் பற்றி அவர் விசேஷமாக எழுதியுள்ள கட்டுரையை இங்கு மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். —ஆசிரியர்

- க. வை. ஆ. சர்மா -

கலியுக வரதனும் கந்தக் கடவுளின் திருவருளால் கந்தபுராணம் பாடத்தொடங்கிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், முதலிரு செய்யுள்களால் ஒப்புயர்வில்லா மூலமுதலாகிய விநாயகப் பெருமானை வணங்கிக் காவல்செய்து கொள்ளுகிறார். காவல் செய்தலே காப்புக்கட்டுதலாகும். காப்பு-கங்கணம் எனவும் சொல்லப்படுவது. ஒருவர் ஒரு கருமத்தைச் செய்வதில் அதிதீவிரமாக முனைந்திருக்கிறார் என்பதை அவர் அக்கருமம் செய்வதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார் என்றுஞ் சொல்லுவர்.

இனி, காவல் செய்வது யாருக்கு, எதன்பொருட்டு எனச் சிந்திக்கவேண்டும். எக்கருமம் செய்யப்படவிருக்கிறதோ அக்கருமத்தைச் செய்பவனாகிய கருத்தாவுக்கும், எடுத்த கருமம் முட்டின்றி இனிது நிறைவேறும்பொருட்டு அக்கருமத்துககும், அச்செயலினால் பயனடையவிருக்கும் ஆனவருக்கும் காவல் வேண்டும் காவல்செய்யப்படாத செயல்கள் யாவும் வேலியில்லாத - வரம்பில்லாத பயிரேபோலச் சிதைந்துவிடும். காவல்செய்தலையே இரட்சாபந்தனம் என வடநூலார் சொல்லுவர். இரட்சா- இரட்சை-பாதுகாப்பு பந்தனம்—கட்டுதல். மந்திரபூர்வமாகப் பூசித்த நூலைக் கையிற் கட்டிக்கொள்ளுதலை இரட்சாபந்தனஞ் செய்யுமிடத்துக்காணலாம். அக்கருமம் இனிது நிறைவேறியபின்பு அவ்வாறு கட்டிய நூலை அவிழ்ப்பர்.

இங்கே புராணம் பாடத் தொடங்கும்போது அமையும் காப்புச்செய்யுள், புராணத்தை வாசிப்பவரும் பொருள் சொல்லுபவரும் அதனைக் கேட்டிருப்பவரும் மனக்குழப்பம் ஏதுமின்றித் தத்தம் கடமைகளை ஆற்றுவதற்காகவே பயபக்தியோடு முதலிற் சொல்லப்

கூறப்பட்ட முத்திறத்தாந்ரது மனம் முதலாய கருவி காரணங்கள் புராணவிஷயத்தில் ஈடுபடுவதேயல்லாமல் பிறவற்றில் ஈடுபடுதல் தகாது. அமைதியின்றி மனங்குழம்புதல் மகாபாபச்செயலாகும். அதனைத் தவிர்ப்பதற்காகவே காப்புச்செய்யுஞ் சொல்லப்படும்.

புராணபடன காலத்தில் புராணத் திருவேட்டை (புத்தகத்தை) அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் பட்டுவிரித்து அதன்மேல் வைத்துப் பூமாலை சாத்தி அப்புராணத்தின் குறிக்கோளான தெய்வமாகவே பாவித்து ஆசனங் கற்பித்து, பாத்தியம், அருக்கியம் ஆசமனீயம் நிவேதனம் முதலான உபசாரங்கள் கொண்டு முறையான பூஜைசெய்து வழிபடுதல்வேண்டும். பின்பு புராணத்துக்குப் பொருளுரைபவரை ஆசனத்திருத்திக் குருமூர்த்தியாகவே நினைத்து வணங்கவேண்டும். புராணத்தை வாசிப்பவரும் பக்திசிரத்தையோடு ஆசனத்தமர்ந்து — புராணங் கேட்பவர் வெறுந்தரையில் அடக்கமாக கூப்பிய கையராய் இருந்து கேட்க, காப்புச் சொல்லுதல் வேண்டும் பின்னர் செய்யுள்களை அவற்றிற்கு ஏற்ற இசையுடன் ஒருமுறை வாசித்தபின் பொருளுரைப்பதற் கேற்றவாறு பகுதிபகுதியாகப் பிரித்துவிடப் பொருளுரைப்பவரும் அதே இசையுடன் கேட்பவர் புரிந்துகொள்ளும் முறையில் விளக்கமாக உரைப்பர். இதுவே புராணபடன முறையாகும்.

> திகட சக்கரச் செம்முக
> ஐந்துளான்
> சகட சக்கரத் தாமரை
> நாயகன்
> அகட சககர வின்மணி
> யாவுறை
> விகடசக்கரன் மெய்ப்பதம்
> போற்றுவாம்.

விநாயக வணக்கமாக அமையும் இத்திருவிருத்தம் காப்புச் செய்யுளில் ஆசாரிய சுவாமிகள் வெளிப்

துநினைந்துவியந்துபோற்றுதற்குரியது. விசகநாயகர் — விநாயகர்தமக்குத் தாமே தலைவர். தம்மை விடப்பிறிதொரு தலைவர் இல்லாதவர். இங்கே தாமரை நாயகன்...சூரியன், அகடு அசக்கு அரவின் மணியா உறை— உதரபந்தனமாக அமையும் ஆதிசேடனது உச்சிமணியாக அமைகிறான்.

இங்கு சூரியனைப் பற்றிச் சிறிது சிந்திப்போமாயின் கவிநுட்பம் புலப்படுவதைக் கண்டு இன்புறலாம். அளக்கலாகா அளவும், மதிக்க முடியாத பேரொளியும் எவராலும் சகிக்கமுடியாத வெப்பமும் உடையவனாய், பரம்பொருளாகிய சிவசக்தி சொரூபத்தைத் தன்னகத்தே தாங்கியவனாய் அகில பிரபஞ்சத்தையும் ஆக்கிக காத்து அழிக்கும் வன்மையுடையவன் சூரியன். சூரிய பகவானை நாம் வணங்கும்போது ''சிவஹாஷநாதா நசாசி'' எனச் சொல்லியும் வணங்குகிறோம்.

சூரியமண்டல மததியில் வீற்றிருப்பவரும், இல்லற பந்தமெனும்பெருநோய்க்கு வைத்தியரும், திருநீலகண்டமுடையவரும், நெற்றிக் கண்ணரும் அம்பிகையுடன் கூடியிருப்பவரும், அழிவே இல்லாதவரும் ஆகிய சிவ பரம்பொருளை வணங்குகிறேன்' என்பதும்-''ஏழுலக நாயரும் எளிக்கற்றைகளைப் பரப்பி எல்லாத் துன்பங்களையும் போக்குபவரும் செவ்வண்ண முகமுடையவரும், முதன்முதல் கண் கண்ட தெய்வமாக எழுந்தருளுபவரும், மேலானவற்றுளெல்லாம் மேன்மை படைத்தபேரொளிவாய்ந்தவரும் வெற்றியை அளிக்கும் சூரியமூர்த்தியாக உள்ளவரும் ஆகிய அப்பரம்பொருளை வணங்குகிறேன்'' என்பதுமாம்.

இந்தக் குறிக்கோளுடன் சூரியமூர்த்தியை வணங்குபவர்க்குச் சூரியமண்டலம் சாதாரணமான ஒன்பது

ங்குகின்ற பத்துத் திருக்கரங்களையும் ஈசானம் தத்புருடம் அகோரம் வாமதேவர் சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களையும் கொண்ட, சிவபரம்பொருள் திரிபுரசங்கார மூர்த்தியாக எழுந்தருளிய போது அமைந்த பூமியாகிய தேருக்குரிய இரு சில்லுகளுள் ஒன்றாகப் பொருந்துவதானல் முப்புரம் எரிசெய்த மூர்த்தியின் பெருமை நம்மால் அளவிடமுடிவதா?

இனி திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் எழுந்தருளிய பூமியாகிய தேரின் அச்சு முதலில் முறிந்தது என்பது வரலாறு.

> ''தச்சு விடுத்தலும்
> தாமடிபிட்டலும்
> அச்சு முறிந்ததென்
> றுந்தீபற''

என்ற திருவாசகத்தாலும் முப்புரம்''எரிசெய்தஅச்சிவனுறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா'' என அச்செயலின் காரணத்தை விநாயக பரத்துவமாக்கிக் கூறிய அருணகிரிநாதர் வாக்காலும் அதனை உணரலாம்.

எனவே அத்தேரின் சக்கரமாக அமைந்த சூரியன், அதே இரதத்தின் அச்சை முறியச்செய்த விநாயகப் பெருமான் கொண்ட விசுவரூபத்து வயிற்றுக் கச்சிலுள்ள பாம்புப் படத்தின் மணியாக விளங்குதல் ஒரு வியப்பாகுமா? விநாயகப் பெருமானது வியஃபெரு வடிவமே வியப்புக்குரியது.

(தொடரும்)

## ஒப்பற்ற தலைவர்

மன்னார், புதன்

காந்தி மகாத்மா ஒப்பற்ற ஒரு தலைவர் என்றும் தம் வாழ்நாள் முழுவதையும் மக்களின் சேவைக்காகவே செலவிட்டவர் என்றும் மன்னார் அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் இங்கு நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. கதிர்காமநாதன் மேலும் பேசுகையில், நாம் காந்தியை இன்று மட்டுமல்ல என்றுமே நினைவில் கொள்ளவேண்டுமென்றார். பொருளாதாரத் துறையில் இலங்கை முன்னேற காந்தி காட்டிய வழி பெரிதும்

# ஜயாரன் எழுதுவது..

தமிழக முதல்வரும். தி. மு. க. கலைருமான கலைஞர் கருணநிதி அவர்கள் இன்னும் இரண்டு மாதங்களிலே இலங்கைக்கு வருவதாகப் பிரபல 'டெயிலி நியூஸ்' பத்திரிகை முதல் பக்கத்திலே பெரிய கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருக்கிறது இதிலிருந்து கருணநிதி அவர்கள் இங்கு வருவதின் முக்கியத்துவத்தை உணரலாம்

பல வருடங்களுக்கு முன் தாம் இலங்கைக்கு வர விரும்பிப் 'பாஸ்போர்ட்' கேட்டதாகவும் ஆனல் இந்திய அரசாங்கம் அதை மறுத்துவிட்டதென்றும் தெரிவிகிறார் அவர். அவர் இங்கு வர இச்சமயம் இந்தியாவில் தடை எதுவும் இராது ஏனெனில் பிரதமர் இந்திரா காந்திக்கும், அவருக்கும் நல்ல உறவுகள் உள்ளன. ஆனல் இங்குள்ள சிலருக்கு அவர் வருவது அவ்வளவாகப் பிடிக்காதிருக்கலாம் என்றாலும் அவருக்கு 'விஸா' தடையின்றிக் கிடைக்குமென்றும் பிரதமர் டட்லி சேனநாயகா அவர் வருவதைத் தடுக்க மாட்டாரென்றும் நம்பலாம்.

இலங்கையிலே பிரதமர் டட்லியைச் சந்திப்பாரா என்று கேட்டதற்கு தமிழக முதல்வர் தமக்குத் தெரியாதென்று பதிலளித்ததாகத் தெரிகிறது. பக்கத்திலுள்ள தமிழக அரசின் முதலமைச்சர் இலங்கைக்கு முதன்முதலாக வருகையில் இங்கு பிரதமரைப் பார்க்காமல் செல்லுவதென்பதை நினைக்கவும் முடியவில்லை

அவரை இலங்கை அரசாங்கமே அழைத்து நேரில் பேசி, பல சந்தேகங்களையும் தீர்த்துக்கொண்டால் பல விதங்களில் நன்மையுண்டு. ஆனல் இதற்குத் தமிழக அரசின் அரசியல் அந்தஸ்து குறுக்கே நிற்கிறதுபோலும். இது எப்படியாயினும் தமிழக முதல்வர் இலங்கைக்கு வருகையிலே பிரதமர் டட்லி அவரைத் தனிப்பட்ட முறையிலாவது வரவேற்று, மனம்விட்டுப் பேசி, நல்லுறவுகளைப் பலப்படுத்திக் கொள்வாரென்று எதிர் பார்ப்பது மிகையல்ல. தி. மு. க.வைப் பற்றி வீண் பீதிகளைக் கொண்டுள்ளவர்

ஷப்பிரசாரம்செய்வதென்று திட்டம் போட்டுள்ளவர்களுக்கு இது சற்றும் பிடிக்காது. என்ன செய்யலாம்!

0 0 0

காரைநகர் அபிவிருத்திச் சபைக் காரியதரிசி திரு. சுப்பிரமணியம் எடுத்த முயற்சியின் காரணமாக, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே மற்றொரு கடுகதி ரயில் விடவேண்டுமென்று தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ தலைவர்கள் ரயில்வே அமைச்சரை வற்புறுத்தி இருக்கிறார்கள்.

இந்த ரயிலில் அடிக்கடி பிரயாணம் செய்யவேண்டியுள்ளவர்களுக்கு இதன் 'சுகம்' தெரியும். பல மணி நேரம், அதிலும் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கு மிடையே நின்றுகொண்டு தான் செல்லவேண்டும். மூன்றாவது வகுப்பிலே நமது அமைச்சர்கள் யாத்திரை செய்தால் பொதுமக்கள் படும் அவதியை உணரலாம்.

இரு தமிழ்க் கட்சித் தலைவர்களும் ஒருமுகமாக வேட்டுள்ள சாதாரண கோரிக்கைக்கு ரயில்வே அமைச்சர் செவிசாய்ப்பாரென்றே நம்புவோம்.

இந்த ரயிலிலுள்ள சிற்றுண்டிச்சாலையிலே நமக்குத் தேவையான இட்லி, தோசை, இடியப்பம் முதலியன ஏன் விற்கக்கூடாது? வெள்ளைக்காரரின் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு வேண்டிய உணவையே ரயிலில் விற்கச்செய்தனர். அதனையேதான் இன்னும் விற்க வேண்டுமா? அதுவும் எவ்வளவு விலை! இத்துடன் ஒவ்வொரு முக்கிய ஸ்டேஷன்களிலும் குடிக்க, குளிரூட்டிய நீர் சொடுக்கச் செய்யக்கூடாதா? காரைநகர் அபிவிருத்திச் சபையார் இவ்விஷயமாக எடுத்த முயற்சியை நாம் பாராட்டுகிறோம்: ரயிலில் உணவு, குடிநீர் முதலிய வசதிகளைப் பற்றியும் முதலில் நமது எம். பி.மார்களுக்கு தெரிவித்து, அவர்களை இயங்கச் செய்து ஓரளவு வெற்றியாவது பெற்றால் பொதுமக்களின் நன்றிக்கு அவர்கள் உரித்தாவார்கள்:

0 0 0

வாக்கினுலின் புரைத்து

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உரிமையை காங்கிரஸ் இழந்துவிட்டதென்றும், அந்த ஸ்தாபனத்தில் ஏற்பட்டுள்ள பிளவே இதற்கு காரணமென்றும் கூறுகின்றார். இந்திய ஜனாதிபதி எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஜனசங் தலைவர்களை அழைத்து மாற்று அரசாங்கம் அமைக்கும்படி கேட்கவேண்டுமென்றும் இப்போதுள்ள பார்லிமெண்ட் சபையைக் கலைக்கவேண்டியதில்லையென்றும் கருதுகின்றார். "சுயராஜ்யா" பத்திரிகையிலே ராஜாஜி எழுதுகையில் உடன்பொதுத் தேர்தல் நடத்த இது தக்க சமயமல்லவென்கிறார். எதிர்க்கட்சிகளால் ஒரு மாற்று அரசாங்கத்தை அமைத்துநடத்த முடியுமா என்றும் அவர் சந்

செல்வாக்கைப் பயன்படுத்தி அங்குள்ள நெருக்கடியைத் தீர்க்க உதவுவார் என்று எதிர் பார்க்கலாம்.

இதே சமயம் காலஞ்சென்ற காயிதே ஆஜம் ஜின்னா அவர்கள் பாகிஸ்தானிலே ஜனநாயக பார்லிமெண்ட் முறையை ஏற்படுத்த எண்ணினாரென்றாலும் அந் நாட்டிலும் பல அரசியல் சங்கடங்கள் ஏற்பட்டு அது முடியாமற் போயிற்று. அண்டையிலுள்ள இவ்விருபெரிய நட்பு நாடுகளிலும் அரசியல் நெருக்கடிகள் நல்லபடியாகத் தீரவேண்டுமென்பதே இலங்கையிலுள்ள நமது மனப்பூர்வமான விருப்பமுமாகும்.

இங்கே புராணம் பாடத் தொடங்கும்போது அமையும் காப்புச்செய்யுள், புராணத்தை வாசிப்பவரும் பொருள் சொல்லுபவரும் அதனைக் கேட்டிருப்பவரும் மனக்குழப்பம் ஏதுமின்றித் தத்தம் கடமைகளை ஆற்றுவதற்காகவே பயபக்தியோடு முதலிற் சொல்லப்படும். அன்றைய புராணப் பகுதி படித்துமுடிந்தவுடன் மீட்டும் காப்புச் செய்யுள் சொல்லப்படும்எனவே அந்த இடைக்காலத்தில் மேலே

சகட சக்கரத் தாமரை
நாயகன்
அகட சககர வின்மணி
யாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம்
போற்றுவாம்.

விநாயக வணக்கமாக அமையும் இந்த முதலாவது காப்புச் செய்யுளில் ஆசாரிய சுவாமிகள் வெளிப்படையாக எக்கருமத்திலும் முதன்மை வழிபாட்டை ஏற்றருளும் விநாயகப்பெருமானது பரத்துவத்தை விளக்கிக்காட்டியமுறை நினை

வரும் வெற்றியை அளிக்கும் சூரியமூர்த்தியாக உள்ளவரும் ஆகிய அப்பரம்பொருளை வணங்குகிறேன்" என்பதுமாம்.

இந்தக் குறிக்கோளுடன் சூரிய மூர்த்தியை வணங்குபவருக்குச் சூரியமண்டலம் சாதாரணமான ஒன்பது கிரகங்களில் ஒன்றுதானே என்று நினைவு இருக்காது.

இவ்வளவு சிறப்பும் பெருமையும் வாய்ந்த சூரியமண்டலமே திகழ் தசக்கரச் செம்முகம் ஐந்துளான்-விள

யில் குறிப்பிட்டார்.

திரு. கதிர்காமநாதன் மேலும் பேசுகையில், நாம் காந்தியை இன்று மட்டுமல்ல என்றுமே நினைவில் கொள்ளவேண்டுமென்றார். பொருளாதாரத் துறையில் இலங்கை முன்னேற காந்தி காட்டிய வழி பெரிதும் உதவும் என்றும் அவர் கூறினார்.

மன்னார் எம். பி. திரு வி. ஏ. அழகக்கோன் பேசுகையில், காந்தி சேவையால் உயர்ந்தவரென்றும் அவர் மறைந்தாலும் அவரது ஒப்பற்ற சேவை அழியாது வாழும் என்றும் கூறினார்.

வருகையிலே பிரதமர் டட்லி அவரைத் தனிப்பட்ட முறையிலாவது வரவேற்று, மனம்விட்டுப் பேசி, நல்லுறவுகளைப் பலப்படுத்திக் கொள்வாரென்று எதிர் பார்ப்பது மிகையல்ல. தி மு. க.வைப் பற்றி வீண் பீதிகளைக் கொண்டுள்ளவர்களும், அத்தலைவரை நேரில் பார்த்துப் பேசினால் வீண் பீதிகள் இராது. அறியாமை தான் சாதாரணமாகச் சந்தேகங்களுக்கும் பீதிகளுக்கும் பெரிதும் காரணமாகும். ஆனால் இந்தப் பீதியையே நம்பி, அடுத்த பொதுத் தேர்தலில் துவே

எம். பி.மார்களுக்கு ஆதரவித்து, அவர்களை இயங்கச் செய்து ஓரளவு வெற்றியாவது பெற்றால் பொதுமக்களின் நன்றிக்கு அவர்கள் உரித்தாவார்கள்:

0 0 0

வாக்கினாலின் புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம், போக்கினாற் புடைத்தவர்கள் உயிர்தனை.யுண்டு மாறன், தேக்குநீர் செய்த கோயில் திருவிராமேச்சுரத்தை, நோக்கினால் வணங்குவார்கள் நோய்வினை நுணுகுமன்றே.

—அப்பர் அடிகள்

# "வீண் ஆடம்பரங்களிலும் மாணவர் சக்தி வீணாகிறது"

## பிரதம கல்வி அதிகாரி

இமையாணன், புதன்

"தற்கால மாணவர்களில் அநேகமானோர் நாகரிகத்திலும் அவசியமற்ற ஆடம்பரங்களிலும் தமது நேரத்தையும் சக்தியையும் வீணாக்குகிறார்கள். அதே நேரத்தை மாணவர்கள் கல்வியில் செலுத்தவேண்டும்."

இவ்வாறு பிரதம கல்வி அதிகாரியான திருமதி ஆர். எஸ். பாமர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்மன்ற இராப்போசன விருந்தின்போது கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் எஸ். ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி பாமர் மேலும் கூறியதாவது:

"ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் முன்னேற்றமடைவதற்கு அங்குள்ளவர்களின் விடாமுயற்சியும், சோம்பல் அற்ற நிலையுமே காரணமாகும்" என்றார்.

திரு. ராஜன் கதிர்காமர் பேசும்போது கூறியதாவது:

"இலங்கையில் மற்ற மாகாணங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் கல்வி முன்னேற்றமடைந்ததற்கு அமெரிக்க மிஷன் ஸ்தாபனத்தார் வழங்கிய அமெரிக்க கல்வி முறையே காரணமாகும்" என்றார்.

இவ்விழாவில் கல்லூரி அதிபர் திரு எஸ். எஸ். செல்லத்துரை உட்பட பல பிரமுகர்களும் உரையாற்றினார்கள்.

## இ.போ.ச. ஊழியருக்கு போனஸ்

யாழ்ப்பாணம், வியாழன்

இ போ ச ஊழியர்களுக்கு வருடா வருடம் வழங்கப்பட்டுவரும் போனஸ் பணத்தைஅடுத்தமாதம் கொடுப்பதற்கு இ போ ச தலைவர் நடவடிக்கை எடுத்துவருகிறார்

இ போ ச ஊழியர்கள் எல்லோருக்கும் தலா 175 ரூபா வீதம் போனஸாக வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

## கூப்பன் யாருடையது

கொக்குவில் ஸ்ரேசனுக்கும் பிரதான வீதிக்கும் இடையில் நேற்று மாலை 3 பங்கீட்டரிசிப் புத்தகங்கள் மானிப்பாயைச்சேர்ந்த திரு தி. க. ஆறுமுகம் என்பவரால்கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அப்பல்லோ-17 கப்பலில் 'ரோலர்' கார் அம்புலிக்கு செல்லும்

ஹன்ட்ஸ்வில், (அலபாமா), நவ. 12

அம்புலியில் கார் ஓட்டலாம் விரைவில்.

விண்வெளி விமானிகள் அம்புலியில் உலாவுவதற்கு எத்தகைய ஊர்திகளைப் பயன்படுத்த வேண்டும்? இதனைப் பற்றி பல ஆண்டுகள் ஆராய்ச்சியும் சோதனையும் நடைபெற்றன. இப்பொழுது தாங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்தனர், ஜார்ஜ் ஸி. மார்ஷல் விண்வெளிப் பயண நிலையத்து அதிகாரிகள். இப்பொழுது முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விமானிகள் அம்புலியில் உலாவத் தொடங்குவர், நிலாக்காரில்.

நான்கு கார்களில் முதல் கார் விண்வெளி நிலையத்துக்கும் இப்பொழுதிலிருந்து 18 மாதத்தில் கொடுக்கப்படவேண்டும். 1971 நவம்பர் மாதத்தில் நடத்தத் தற்காலிகமாகத்திட்டமிடப்பட்டிருக்கும்அப்பல்லோ-17 அம்புலிப்பயணத்துக்கு இந்தக்கார் பயன்படுத்தப்படும்.

400 றாத்தல் எடையுள்ள இந்தக் காரின் பெயர் ரோவர்.

"அம்புலி ஆராய்ச்சியாளர்களுக்கு பெரும் வாய்ப்புகளைத்தரக்கூடியதுரோவர்" என்றார் ஸவேரியர் எஃப் மொரியா. மார்ஷல் நிலையத்தில் ரோவர் திட்ட நெறியாளராக இருக்கிறார் இவர்.

"மிகவும் பத்திரமான இறங்கும் இடத்தில் இறங்கவே விண்வெளிவிமானிகள் விரும்புகின்றனர். ஆனால் அந்தஇடம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உகந்த இடமாகவோ கவர்ச்சியுள்ள இடமாகவோ இருக்காமல்போகலாம். பளுமிக்க விண்வெளி உடுப்புகளை அணிந்துகொண்டும், முதுகிலே பளுவான மூட்டைகளைச் சுமந்து கொண்டும், கைகளிலே கருவிகள் பிற தளபாடங்களை எடுத்துக்கொண்டும் அவர்கள் நடந்து சென்றால், ஆராய்ச்சி நடத்தவேண்டிய இடத்தை அடைவதற்கு முன்பே அவர்களுக்கு உடல் சோர்வு ஏற்பட்டுவிடும். விமானம் ஒன்றில் பறந்து வந்து விமான நிலையத்தில் இறங்கிற பின்னர் செல்ல வேண்டிய இடத்துக்கு நடந்து போவதுபோல் ஆகும் இது. ரோவர் கார் விண்வெளி விமானிகளை ஏற்றிச் செல்வதுடன் அவர்களுடைய கருவிகள் தளபாடங்களையும் அவர்கள் சேகரிக்கும் அம்புலிக் கற்களையும் எடுத்துச் செல்லும்" என்றார் ஸவேரியா.

ரோவர் காரில் விண்வெளி வீரர்கள் அடுத்தடுத்து உட்கார்ந்திருப்பர். முதன் முதலில் கார் வந்த காலத்திலே இருந்த காரின் தோற்றம் தான் இந்த ரோவர் காருக்கும் இருக்கும். திறந்தவண்டியாக இருக்குமாதலால், குதிரை பூட்டப்பெறாத சாரட்டு மாதிரி இருக்கும். இதன் சக்கரத்தின் விட்டம் 32 அங்குலமிருக்கும்.

45 டிகிரி (பாத) சரிவில் ரோவர் குறுகக்கே செல்லக்கூடியது குடைசாியாது இதனுடைய நான்கு சக்கரங்கள் ஒவ்வொன்றும் தனித் தனி மோட்டாரினால் இயக்கப்படுகின்றன 25 டிகிரி சரிவில் இது ஏறமுடியும் விண்வெளிவிமானிகள்வண்டியை வலப்புறமாகத் திருப்புகையில் பின் பக்கச் சக்கரங்கள் முதலில் இடப்புறம் திரும்பி பின்னர் படிப்படியாக முன்புறச் சக்கரங்கள் வகுத்தத் தடங்களுக்குள் வந்துவிடும் இவ்வாறு இயங்கும்படி இந்த நான்கு சக்கரங்களும் இணைக்கப் பெற்றிருக்கின்றன

அம்புலியில் ரோலர் அதிகபட்சமாக மணிக்கு பத்து மைல் வேகத்தில் செல்லும் ஆங்காங்குதொலைவில் இருக்கும் பலப்பல இடங்களுக்குச் செல்ல பயன்படுத்தப்படும் இதனால் விண்வெளி விமானிகள் அதிக தூரம் உலாவும் வாய்ப்பு கிடைக்கும் இப்பொழுது அவர்கள் அம்புலியில் இறங்கிய நிலாவாகனத்திலிருந்து ஏறத்தாளஅரைமைல் தூரத்திற்குமேல் செல்லக் கூடாது

நிலா வாகனத்திலிருந்து 3 மைல் சுற்று வட்டத்துக்குள் விமானிகள் ஆராய்ச்சி நடத்தலாம் இப்பொழுதுள்ள தளவாடங்கள் அவர்களை அம்புலியில் குறுகிய காலத்திற்குத்தான் இருக்க அனுமதிக்கின்றன ரோவர் காரைப் பயன்படுத்தினால் இந்தக்குறுகிய காலத்திலேயே அவர் நிறைய விஞ்ஞான ஆராய்சி நடத்த முடியும்.

ரோவர் காருக்கும் இவ்வளவு தூரம் தான் செல்லலாம் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள தற்கும் காரணம் உண்டு. இந்தக் காரிலே ஏதாவது ஏற்படுமாகில் விண்வெளி விமானிகள் அத்தனைதூரம் நடந்து வரவேண்டியிருக்கும் நிலா வாகனத்தை அடைய முக்கிய ஆக்ஸிஜன் கொள்கலத்தில் இருக்கும் ஆக்ஸிஜன் தீர்ந்து போவதற்குமுன் அவர்கள் திரும்பி வநதாக ஆகவேண்டும்.

இப்பொழுது தயாரிக்கப்பெற்று வரும் தளவாடத்தின் துணை கொண்டு விண்வெளி விமானிகள் அம்புலியில் 78 மணி நேரம்தங்கியிருக்கமுடியும் என்றும் ஆகமொத்தம் 120 மைல் பயணம் செய்ய முடியும் என்றும் பொறியியல் வல்லுநர் மதிப்பிடுகிறனர்

ஆசிரியருக்குக்கடிதம்

# இடமாற்றப் பிரச்னைக்கு நல்லமுடிவு தேவை

காலத்துக்குக் காலம் ஆசிரிய உலகில் தோன்றி முடிவு பெறாது நீண்டுகொண்டேயிருக்கும் தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னைக்கு ஆசிரிய சங்கங்களும் வித்தியாபகுதியினரும் கல்விமான்களும் சேர்ந்து ஒரு முடிவுகாணவேண்டியது அவசியமாகும்.

தமிழ்ப் பாடசாலைகளைப் பொறுத்தஅளவில் வட, கிழ் மாகாணங்களைச் சொந்த இடங்களாகக்கொண்ட ஆசிரியர்களே தொண்ணூறு சதவீதமானோர். இவர்களில் அதிஷ்டசாலிகளானோர் சொந்த இடங்களில் கடமையாற்ற வாய்ப்புப்பெற ஏனையோர் வெளி மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் கடமை ஏற்றனர். வெளிமாகாணங்களில் கடமையாற்றுவோர் பலவித இன்னல்களுக்கிடையே நீண்டகாலம் கடமையாற்றி வருகின்றனர். அவர்களும் தமது சொந்த இடங்களில் சிலகாலமாவது கடமையாற்றவிரும்புவது இயற்கையே.

அவர்கள் சொந்த இடங்களுக்கு மாற்றப்படின் அவர்களின் இடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். அன்றேல் அவர்கள் மாற்றம்பெறுவது இயலாததாகும். கடந்த காலங்களில் நடைபெற்றதுபோன்று அவர்களின் இடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாது அவர்கள் மாற்றம் பெற்றாலும் அப்பாடசாலைகள் ஆசிரியர்கள் பற்றாக்குறைகாரணமாகத்தேய்ந்து தேய்ந்து நாளடைவில் அற்றேபோகலாம். இவ்வாறு சில பாடசாலைகள் கடந்த காலத்தில் மூடப்பட்டுள்ளன. தமிழ்க்கல்வி கற்றுவந்தபிள்ளைகள் தகுந்த கல்வி கிடையாததாலும் நிர்ப்பந்தத்தாலும் சிங்கள மொழி மூலம் கற்கத்தொடங்கிவிடுவர். இதனால் தமிழ் பேசும்மக்கள் தமது சொந்த மொழியைக் கைவிட்டு அந்நிய மொழி கற்போராகி நாளடைவில் அந்நியராகவே ஆகிவிடுவர். அன்றியும் தமிழ்பேசும் மக்களுக்கான வேலைவாய்ப்புக்கள் முன்னிருந்ததிலும் பார்க்கக் குறைந்துவிடச் சிங்கள மக்களுக்கான வேலைவாய்ப்புக்கள் கூடும்.

வெளி மாகாணங்களில் கடமையாற்றுவோர்சொந்த இடங்களுக்கு மாற்றம்பெறவும் அதேநேரத்தில் வெளிமாகாணங்களின் தமிழ்க் கல்வியின் தரம் பாதிக்கப்படாமலும் இருக்கவேண்டுமாயின் சிலர் சொல்வது போன்று எதிர்காலத்தில் பிரதேசஅடிப்படையிலேயே ஆசிரியர் நியமனங்கள்நடைபெறவேண்டும். அதாவது வெளிமாகாணங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களே நியமனம்பெறவேண்டும். தமிழ் பாடசாலைகள் மூடப்படவேண்டியிருக்குமிடத்து இந் நியமனங்களும் தேவைப்படாதுபோகலாம். வடமாகாணம், கிழ்மாகாணங்களில் எதிர்காலத்தில் ஏற்படும் காலியான இடங்களுக்குஇப்போதுவெளிமாகாணங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம்பெறலாம். புதிய ஆசிரியர் நியமனங்கள் நடைபெறமாட்டா ஆசிரியத் தொழிலில் வட, கிழ் மாகாணத்தவர்கள் பிரவேசிக்கமுடியாது கதவடைக்கப்பட்டுவிடும் இம்முறையினை எமது சகோதரர்கள் விரும்புகிறார்களா?

சற்றுச் சிந்தியுங்கள் இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான ஒரேவழி வெளிமாகாணங்களுக்கு ஒருபோதும் கடமையாற்றச் செல்லாதவர்கள் தாமாகவே முன்வந்துமாற்றம்பெற்று வெளிமாகாணங்களில் ஒரு சில காலமாவது கடமையாற்ற வேண்டும் அன்றேல் வித்தியா பகுதியினர் மாற்றஞ் செய்யும்போது அதனை மறுக்காது மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது வெளிமாகாணங்களில் கடமையாற்றுவோரில்அதிகமானோர் ஆரம்பத்தில் வடமாகாணச் சங்கங்களில்அங்கத்துவம் வகித்தவர்களே அவர்கள்சொந்த இடங்களுக்கு மாற்றம் பெற்றுவர வாய்ப்புப்பெறுமிடத்து இப்போது வெளிமாகாணங்களுக்கு மாற்றப்படஇருப்பவர்களும் விரைவில் சொந்த இடங்களுக்கு மீண்டும் மாற்றம்பெறலாம் என்ற திடமான நம்பிக்கைக்கு இடமுண்டு.

தமிழ்ச் சமுதாயத்துக்கும் எம்சகோதர ஆசிரியர்களுக்கும் செய்யும் பேருதவியாக இவ்வாண்டு முடிவில் நடைபெறக்கூடிய இடமாற்றத்துக்கும் கூடியஒத்துழைப்பை நல்கும்படி சகோதர ஆசிரியர்களையும் கல்வி மான்களையும் அன்புடன் வேண்டுகிறேன்.

க. மாணிக்கவாசகர்,
தலைமையாசிரியர்

## அமைச்சர் விஜயம்

ஏறாவூர், வியாழன்

இம்மாதம் 15-ம் திகதி உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயகா நிந்தாவூர்த் தொகுதிக்கு விஜயம் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org